காலை முரசு
பக்கங்கள்:-25

# பேராயருடன் ஐ.நா. பிரதிநிதி முக்கிய சந்திப்பு



இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் சபையின் வதிவிட ஒருங்கிணைப்பாளர் மார்க்-ஆன்ட்ரே பிரான்ச், பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகையை 06

முழக்கம்: 03 | வள்ளுவர் ஆண்டு 2057 | மாசி 20 | புதன்கிழமை | 04.03.2026 | அதிர்வு 216



# சர்வதேசக் கண்காணிப்பில் இருந்து இலங்கையை விடுவிக்கவே முடியாது!

## ஐ.நாவில் பிரித்தானியா தலைமையிலான குழு அதிரடி

## பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க இடித்துரைப்பு

இலங்கையில் நீண்டகாலமாக சர்ச்சைக்குரியதாக இருந்து வரும் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும் அல்லது அதன் பயன்பாட்டைத் தவிர்க்க வேண்டும் என ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பான முக்கிய குழு மீண்டு மொருமுறை வலியுறுத்தியுள்ளது. 06

## மத்திய கிழக்கு போர் பதற்றம்:

# இலங்கையில் உள்ள தூதரகங்களுக்கும் வெளிநாட்டவர்களுக்கும் கடும் பாதுகாப்பு



## பொலிஸ்மா அதிபர் அவசர உத்தரவு

இலங்கையில் அமைந்துள்ள வெளிநாட்டுத் தூதரகங்கள், உயர்ஸ்தானிகராலயங்கள் மற்றும் இந்நாட்டில் தங்கியுள்ள வெளிநாட்டவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக விசேட பாதுகாப்பு வேலைத்திட்டமொன்றைப் பொலிஸார் நடைமுறைப் படுத்தியுள்ளனர்.

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர் பதற்றமான சூழலைக் கருத்தில் கொண்டு, நாட்டின் அமைதியைப் பேணவும் அசம்பாவி தங்களைத் தவிர்க்கவும் பொலிஸ்மா அதிபரால் இந்த அவசர அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன. (மற்றொரு செய்தி 4ஆம் பக்கத்தில்...)




நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் ஆண்ட்ரியாஸ் கிராவிக்குக்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர்களுக்கும் இடையிலான சந்திப்பு நேற்றுக் கொழும்பில் நடைபெற்றது.

தமிழரசுக் கட்சியின் பொதுச்செயலாளர் எம்.ஏ. சுமந்திரன், நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன் ஆகியோர் இந்தச் சந்திப்பில் பங்கேற்றிருந்தனர்.

சந்திப்புப் பற்றிய விவரங்கள் ஏற்கனவே ஊடகங்களில் வெளியாகி விட்டன.

அந்தச் சந்திப்பின்போது தமிழரசுக் கட்சி உறுப்பினர்கள் ஒரு முக்கிய விடயத்தை நோர்வேத் தரப்பினருக்குச் சுட்டிக் காட்டினர்.

இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் உட்பட சிறுபான்மையினரின் நலன்கள் சம்பந்தப்பட்ட பல விடயங்களில் ஸ்கண்டினேவிய நாடுகள் கடந்த காலங்களில் காத்திரமாகப் பங்களித்து வந்திருக்கின்றன. இலங்கை அரசுக்கும் விடுதலை புலிகளுக்கும் இடையில் நடைபெற்ற அமைதி முயற்சிகளில் நோர்வே அனுசரணைப் 06

# மத்திய கிழக்கு போர் எதிரொலி: 205 விமான சேவைகள் இரத்து!

## சுற்றுலாப் பயணிகளுக்கு காலவரையற்ற விசா நீடிப்பு



மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றம் காரணமாக இலங்கையுடனான சர்வதேச விமானப் போக்குவரத்து கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது என்று துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் அருண கருணாதிலக தெரிவித்தார்.

அமைச்சின் வளாகத்தில் நேற்று நடைபெற்ற விசேட கலந்துரையாடலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தற்போதைய நிலவரப்படி மொத்தம் 205 விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

நாட்டுக்கு வரவிருந்த 107 விமானங்களும், புறப்படவிருந்த 98 விமானங்களுமாக மொத்தம் 205 விமான சேவைகள் இரத்துச் செய்யப்பட்டுள்ளன.

முன்னதாக வெளிநாட்டவர்களுக்கு 2 வார கால விசா நீடிப்பு அறிவிக்கப்பட்டிருந்த நிலையில், தற்போது அதில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது. பயணிகள் எதிர்நோக்கும் அசௌகரியங்களைக் கருத்திற்கொண்டு, அவர்கள் இலங்கையில் தங்கியிருக்கும் காலம் முழுவதற்கும் (அவர்கள் நாடு திரும்பும் வரை) எவ்விதக் கூடுதல் கட்டணமுமின்றி விசா வசதிகளை வழங்க அரசு தீர்மானித்துள்ளது.

விமானப் பயணங்கள் இரத்துச் செய்யப்பட்டதால் பாதிக்கப்பட்டுள்ள பயணிகளுக்கு இரு முக்கிய உத்தரவாதங்களை வழங்கியுள்ளோம்.

இரத்துச் செய்யப்பட்ட பயணச் சீட்டுகளுக்கான முழுப் பணத்தையும் எவ்விதக் கூடுதல் கட்டணமுமின்றித் திரும்பப் பெறலாம் அல்லது, மாற்று விமானப் பயணங்களுக்கு எவ்வித மேலதிகக் கட்டணமுமின்றி மாற்றிக்கொள்ள வசதிகள் செய்து கொடுக்கப்படும்.

மத்திய கிழக்கு வான்பரப்பைத் தவிர்த்து, மாற்று வழிகள் ஊடாக ஐரோப்பாவுக்கான விமானங்கள் இயக்கப்படுகின்றன.

இதற்கு அதிக எரிபொருள் செலவாகும் என்பதனால் நிலைமை சீரடையும் வரை விமானங்களில் எடுத்துச் செல்லப்படும் பொதிகளை மட்டுப்படுத்த வேண்டி வரும்.” – என்றார்.



# இலங்கைக்கு விஜயம் செய்யுமாறு பாப்பரசருக்கு ஜனாதிபதி அழைப்பு

## வத்திக்கான் அதிகாரிகளிடம் விசேட அழைப்பிதழ் கையளிப்பு

பரிசுத்த பாப்பரசர் 14 ஆம் லியோவை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்ளுமாறு ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க உத்தியோகபூர்வமாக அழைப்பு விடுத்துள்ளார்.

தற்போது இத்தாலிக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொண்டுள்ள அமைச்சர் பிமல் ரத்நாயக்க, வத்திக்கானில் நாடுகளுடனான உறவுகளுக்கான துணைச் செயலாளர் அருட்தந்தை மிஹைட்டா பிளாஜ்ஜைச் சந்தித்து இந்த அழைப்பிதழைக் கையளித்தார்.

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க சார்பாக, அமைச்சர் பிமல் ரத்நாயக்க இந்த உத்தியோகபூர்வ அழைப்பை வத்திக்கான் அதிகாரிகளிடம் வழங்கினார்.

இலங்கைக்கும் வத்திக்கானுக்கும் இடையிலான நீண்டகால இராஜதந்திர உறவுகளை மேலும் வலுப்படுத்துவது குறித்து இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.



இலங்கையில் தேசிய ஒற்றுமை மற்றும் நல்லிணக்கத்தை கட்டியெழுப்புவதற்கு பாப்பரசரின் விஜயம் ஒரு முக்கிய மைல்கல்லாக அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



# மனிதாபிமான உதவிகளுக்கு நன்றிகள்! எதிர்கால அபிவிருத்திக்கு ஒத்துழைப்பு!!

## சஜித் - நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்ச சந்திப்பில் இணக்கம்

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் இலங்கை வந்துள்ள நோர்வே நாட்டின் பிரதி வெளிவிவகார அமைச்சர் ஆண்ட்ரியாஸ் கிராவிக் ஆகியோருக்கிடையிலான விசேட சந்திப்பு நேற்று பிற்பகல் நடைபெற்றது. இச்சந்திப்பின் போது இரு நாடுகளுக்கும் இடையிலான உறவை மேம்படுத்துவதற்கான தொலைநோக்கு மூலோபாயங்கள் முன்வைக்கப்பட்டன.

டித்வா சூறாவளிப் பாதிப்பின் போது CERF, WFP மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் ஊடாக நோர்வே வழங்கிய 24 மில்லியன் நோர்வே குரோனர் (மேழு) மதிப்பிலான உடனடி மனிதாபிமான உதவிகளுக்கு எதிர்க்கட்சித் தலைவர் தனது நன்றியைத் தெரிவித்தார். அத்துடன், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கண்ணிவெடி அகற்றும் பணிகளில்நோர்வேஅரசுவழங்கிவரும்தொடர்ச்சியான ஒத்துழைப்பையும் அவர் இதன் போது பாராட்டிப் பேசினார்.

இலங்கையைப் பசுமைத் தொழில்மயமாக்கலுக்கு இட்டுச் செல்வதில் உள்ள ஆர்வத்தை வெளிப்படுத்திய சஜித் பிரேமதாஸ, பின்வரும் துறைகளில் நோர்வேயின் நிபுணத்துவத்தைக் கோரினார்:

**புதுப்பிக்கத்தக்க சக்தி:**

மிதக்கும் சூரிய ஆற்றல் நிலையங்கள் மற்றும் காற்றாலை மின் உற்பத்தி.

**எரிபொருள் மாற்றம்:**

புதைபடிவ எரிபொருட்களைச் சார்ந்திருப்பதைக் குறைப்பதன் மூலம் சுற்றுச்சூழல் மற்றும் பொருளாதார ரீதியான முன்னேற்றத்தை எட்டுதல்.

**கடல்சார் வளங்கள்:**

மீன்பிடித் துறை, கடல்சார் பாதுகாப்பு மற்றும் நிலையான துறைமுக அபிவிருத்தி உள்ளிட்ட “நீலப் பொருளாதார” (Blue Economy) திட்டங்களை விரிவுபடுத்துதல்.

2028ஆம் ஆண்டுக்கான இறையாண்மைப் பத்திரக் கடன் இலக்குகளை எட்டுவதற்குத் தேவையான நிறுவன ரீதியிலான சீர்திருத்தங்கள் குறித்து எதிர்க்கட்சித் தலைவர் வலியுறுத்தினார். குறிப்பாக வரி நவீனமயமாக்கல், உள்நாட்டு வள மேம்பாடு மற்றும் ஊழல் எதிர்ப்பு கட்டமைப்புகளில் நவீன தொழில்நுட்ப ஒத்துழைப்பை அவர் நோர்வேயிடமிருந்து எதிர்பார்ப்பதாகக் குறிப்பிட்டார்.

ஜனநாயக ஆட்சி, மனித உரிமைகள் மற்றும் பாலின சமத்துவத்தைப் பாதுகாப்பதில் தனது அர்ப்பணிப்பை மீண்டும் உறுதிப்படுத்திய சஜித் பிரேமதாஸ, மத்திய கிழக்கில் நிலவும் போர் பதற்றங்கள் மற்றும் அதன் புவிசார் அரசியல் தாக்கங்கள் குறித்தும் நோர்வே பிரதி அமைச்சருடன் கலந்துரையாடினார்.

இலங்கை மற்றும் நோர்வே ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான நீண்டகால நட்புறவை மேலும் வலுப்படுத்தும் நோக்குடன் இச்சந்திப்பு நிறைவுற்றது.











# இலங்கையில் தூதரகங்களை பாதுகாக்க விசேட நடவடிக்கை

இலங்கையில் அமைந்துள்ள தூதரகங்கள் மற்றும் உயர்ஸ்தானிகரகங்களின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக விசேட வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இந்தப்பாதுகாப்புவேலைத்திட்டத்தை மறுஅறிவித்தல் விடுக்கப்படும் வரை தொடர்ச்சியாக நடைமுறைப்படுத்துமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

உலகளாவிய ரீதியில் எழுந்துள்ள நெருக்கடியான நிலைமையைக் கருத்தில் கொண்டு, நாட்டின் பாதுகாப்பு மற்றும் அமைதியைப் பேணுவதற்கு இடையூறு விளைவிக்கும் சம்பவங்களைத் தடுக்கும் நோக்கில் பொலிஸ்மா அதிபரால் அனைத்து பொலிஸ் நிலையங்களுக்கும் இந்த அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டுள்ளன.

அதற்கமைய, தூதரகங்கள், உயர்ஸ்தானிகரகங்கள், அவற்றின் உத்தியோகபூர்வ இல்லங்கள் மற்றும் தொடர்புடைய ஏனைய இடங்களின் பாதுகாப்பை பலப்படுத்தி விசேட பாதுகாப்புத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், இந்நாட்டிற்கு வருகை தந்துள்ள மற்றும் இங்கு தங்கியுள்ள வெளிநாட்டவர்களின் உயிர் மற்றும் சொத்துப் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக 24 மணி நேரமும் செயற்படும் வகையிலான பாதுகாப்பு வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்துமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இதன்கீழ் அவர்கள் தங்கியிருக்கும் இடங்கள், வர்த்தக நிலையங்கள், சுற்றுலாத் தலங்கள், குடியிருப்பு கட்டடங்கள் மற்றும் மத வழிபாட்டுத் தலங்களின் பாதுகாப்பும் உறுதி செய்யப்படவுள்ளது.

தேவை ஏற்பட்டால் இந்த பாதுகாப்புத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு முப்படையினரின் உதவியைப் பெற்றுக்கொள்ளுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.





# வெளிநாட்டு தொழிலாளர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவதற்கு அவசர காலப் பிரிவு

வெளிநாட்டு தொழிலாளர்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளின் பாதுகாப்பை உறுதி செய்வதற்கும் அவர்களுக்கு தேவையான உதவிகளை வழங்குவதற்கும் விசேட அவசர கால பதிலளிப்பு பிரிவு நிறுவப்பட்டுள்ளது.

வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு மற்றும் சுற்றுலா அமைச்சின் வழிகாட்டலின் கீழ் மத்திய கிழக்கு வலயத்தில் நிலவும் பதற்றமான சூழ்நிலையை கருத்திற்கொண்டு இந்த பிரிவு ஸ்தாபிக்கப்பட்டுள்ளது.

அவசர நிலைமைகளின் போது +94 117 445641 மற்றும் +94 112 207250 ஆகிய தொலைபேசி இலக்கங்கள் அல்லது emergency.sl@mfa.gov.lk எனும் மின்னஞ்சலின் ஊடாக தொடர்பு கொள்ள முடியுமென வெளிநாட்டு அலுவல்கள், வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளிலுள்ள இலங்கையர்கள் மற்றும் அவர்களது இலங்கையிலுள்ள உறவினர்களுக்கு தேவையான தகவல்களை வழங்குவதற்காக இந்த அவசர கால பதிலளிப்பு பிரிவு 24 மணித்தியாலங்களும் செயற்படுத்தப்பட்டுள்ளது.

# நுவரெலியா மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் புல்வெளிகளிலும் தரையினும் படரும் உறைபனி!



**(மஸ்கெலியா நிருபர்)**

நுவரெலியா குதிரைப் பந்தயத் திடலில் நேற்றும் பனிப் பொழிவு காணப்பட்டது. அத்துடன் நுவரெலியா மாவட்டத்தில் பல்வேறு இடங்களில் நேற்றுக் கடுமையான குளிரான காலநிலை நிலவியது.

டித்வா புயலின் பின்னர் கடந்த சில மாதங்களாகவே நுவரெலியா மாவட்டத்தில் இவ்வாறான உறை பனி நிலைமை நிலவி வரும் நிலையில், நேற்றும் அதன் தாக்கம் பல்வேறு பகுதிகளில் தொடர்ந்தது.

குறிப்பாக, மாலை நேரங்களில் நிலவும் கடுமையான குளிரைத் தொடர்ந்து, அதிகாலை வேளைகளில் தரையிலும் புற்களின் மேலும் உறை பனி அல்லது ‘உப்புப் பனி’ படர்ந்து காட்சியளிக்கிறது.

கடந்த காலங்களில் இத்தகைய உறை பனி நிலைமை அரிதாகவே காணப்பட்ட போதிலும், தற்போது இது தொடர்ச்சியாக நிலவி வருகின்றது.

இயற்கையின் இந்த மாற்றத்தை அனுபவிப்பதற்காக நுவரெலியாவிற்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையும் தற்போது அதிகரித்துக் காணப்படுகின்றது.

கடந்த காலங்களில் டிசம்பர் மாதத்தில் இவ்வாறு பணி ஆரம்பித்து ஜனவரி மாதம் வரை தொடர்ந்து கடும் பனிப்பொழிவு ஏற்படும்.

காலமாற்றத்தின் பின்னர் தற்போது நுவரெலியா மாவட்டத்தில. பெப்ரவரி, மார்ச்சிலும் இவ்வாறான குளிர் நிலவி வருகிறது.



# இன்று ஒரே நாளில் 27 பவுஸர்களில் குடாநாட்டுக்கு எரிபொருள் வழங்கல்

## இனி தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடமிருக்காதாம்

**(ந.லோகதயாளன்)**

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கு இன்று 27 பவுஸர்களில் பெற்றோல் விநியோகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் பெற்றோலைப் பெறுவதற்கு சகல எரிபொருள் விற்பனை நிலையங்களிலும் அதிக மக்கள் காத்திருக்கும் நிலை தொடர்கின்றது.

இந்த நிலையைப் போக்குவதற்கு மாற்றுத் திட்டமாக இன்றைய தினம் ஒரே நேரத்தில் சகல எரிபொருள் விற்பனை நிலையங்களுக்கும் எரிபொருள் விநியோகம்செய்யதிட்டமிடப்பட்டுள்ளது.

ஒரேநாளில் 27 பவுஸர் பெற்றோல் விநியோகம் செய்வதற்காக குடாநாட்டில் உள்ள எரிபொருள் விநியோக பவுஸர்களுகு மேலதிகமாக தெற்கில் இருந்தும் பல பவுஸர்கள் எடுத்து வரப்படுகின்றன எனவும், இன்றைய விநியோகத்துடன் குடாநாட்டில் பெற்றோல் தட்டுப்பாடு என்னும் சூழல் காணப்படாது என எதிர்பார்க்கப்படுவதாக யாழ்ப்பாணம் பெற்றோலியக் கூட்டுத்தாபன உதவி முகாமையாளர் தெரிவித்தார்.

## இரகசியம் பரகசியம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பணி வகித்திருக்கின்றது. புலிகளுக்கும் அரசுப் படைகளுக்கும் இடையில் ஏற்பட்ட யுத்த நிறுத்தத்தை கண்காணிக்கும் நடவடிக்கைய நோர்வே, சுவீடன், பின்லாந்து, டென்மார்க், ஐஸ்லாந்து ஆகிய நோர்ட்டிக் நாடுகள் தலைமையிலான கண்காணிப்புக் குழுவே முன்னெடுத்தது.

இதே போல வேறு சில நாடுகளும் இலங்கை விடயத்தில் – குறிப்பாக சிறுபான்மையினர் விடயத்தில் – அவர்களுடன் நெருக்கமாகக் கடந்த காலங்களில் செயற்பட்டு வந்து இருக்கின்றன.

அந்தத் தரப்புக்களை மீண்டும் ஒன்றிணைத்து, தமிழர் தரப்புப் பிரதிநிதிகளான தமிழரசுக் கட்சியினருடன் தொடர்ந்து அத்தகைய ஈடுபாட்டிலும் தொடர்பாடலிலும் நெருங்கிச் செயல்பட ஒழுங்கு செய்து தரவேண்டும். இவ்விடயத்தில் நோர்வே முன் நின்று பணியாற்றி, அவர்களை ஒன்றிணைத்துத் தர வேண்டும் என்ற கோரிக்கையை நேற்றைய சந்திப்பின்போது தமிழரசுக் கட்சியின் இரு பிரதிநிதிகளும் நோர்வேத் தரப்பினரிடம் உரிமையுடன் முன்வைத்தனர்.

கனகாத்திரமான – பிரயோசனமான – தகுந்த நடவடிக்கையை எடுக்கக்கூடிய – திட்டம் இது என்று கூறிய நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர், அவ்வாறு நோர்ட்டிக் நாடுகளை அல்லது ஸ்கண்டினேவிய நாடுகளையும் பிற முக்கிய நாடுகளையும் ஒன்றிணைத்து, அவ்வாறு செயல்படுவதற்கான முன் முயற்சிகளை நோர்வே விரைந்து முன்னெடுக்கும் என்றும், அது பற்றிய மேலதிக தகவல்கள், விவரங்கள் ஒஸ்லோவில் இருந்து தெரிவிக்கப்படும் என்றும் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் இந்தச் சந்திப்பின் போது தமிழரசுக் கட்சிப் பிரதிநிதிகளிடம் தெரிவித்தார் என அறிய வந்தது.

\+ \+ \+

அவர் வடக்கின் கற்றறிந்த புத்திஜீவிகள் சமூகத்தில் ஒருவர். இளைஞர் என்ற கட்டத்தைத் தாண்டியவர். அண்மைக் காலத்தில் 'திசை காட்டி' பக்கத்தில் சேர்ந்து கொண்ட பல்கலைக்கழக வட்டார பிரகிருதிகளில் ஒருவர். தொலைபேசியில் என்னோடு பேசினார்.

கொழும்புத் தமிழ்ச் சங்கத்தில் நடைபெற்ற மூத்த ஊடகவியலாளர் பாரதி இராஜநாயகத்தின் நினைவேந்தல் நிகழ்வில் சுமந்திரன் ஆற்றிய உரை குறித்த விடயங்களை நேற்றும் முன்தினமும் என் பத்தியில் நான் பிரஸ்தாபித்திருக்கின்றமை குறித்துத்தான் அவர் நோண்டினார்.

முதல் நாள் நான் எழுதிய விடயத்தில் சில திருத்தங்களை சுமந்திரன் சுட்டிக்காட்டினார் என்று நேற்று என் பத்தியில் குறிப்பிட்டிருந்தேன் அல்லவா?

அந்த விடயங்களை ஒட்டியே இந்த கற்றறிந்த புத்திஜீவில் பிரமுகரின் கருத்தும் இருந்தது.

"முதல் நாள் நீங்கள் குறிப்பிட்ட விடயத்தில் சில திருத்தங்களை சுமந்திரன் சுட்டிக்காட்டினார் என்று இன்றைய (நேற்றைய) பத்தியில் குறிப்பிட்டுள்ளீர்கள். அப்படியானால் அந்தத் திருத்தத்துக்கு அப்பால் நீங்கள் குறிப்பிட்ட விடயங்கள் எல்லாம் தமது உரையில் சரியாக இருக்கின்றன என்று சுமந்திரன் கருதுகிறார் தானே?" – என்று கேட்டார் அந்த நண்பர்.

"ஆமாம். சுமந்திரன் சுட்டிக்காட்டிய பிழையை நான் இன்றைய (நேற்றைய) பத்தியில் திருத்தி உள்ளேன். நான் குறிப்பிட்ட மிகுதி விடயங்கள் சரி என்ற காரணத்தினால்தான் அவை தொடர்பில் சுமந்திரன் திருத்தங்கள் எதனையும் குறிப்பிடவில்லை" – என்றேன் நான்.

"அப்படியானால், இலங்கையின் பிரதமராக சுமந்திரன் வரவேண்டும் என்று தற்போதைய ஜனாதிபதி அநுர குமார திஸநாயக்க முன்னர் எதிரணியில் இருந்த போது குறிப்பிட்டார் என்று நீங்கள் எழுதியது சுமந்திரனின் பேச்சுத்தானே? அந்த விடயத்தை சுமந்திரன் மறுக்கவில்லைத்தானே? அப்படி சுமந்திரன் பிரதமராக வேண்டும் என்று எப்போது அநுர குமார திசநாயக்க கூறினார்? அதை ஒரு தடவை சுமந்திரனிடம் கேட்டுத் தெளிவுபடுத்த முடியுமா? உண்மையை உங்களால் வெளிப்படுத்த இயலுமா?" – என்று எனக்குச் சவால் விடும் பாணியில் அந்த நண்பர் குறிப்பிட்டார்.

"எனக்கு ஓரிரு நாள்கள் தாருங்கள். முழுமையாக விசாரித்து, நாடாளுமன்ற நண்பர்களைக் கேட்டு, இயலுமானால் நாடாளுமன்றப் பதிவுகளைப் பரிசீலித்து, உண்மையைக் கண்டறிந்து தெளிவுப்படுத்துகிறேன். சுமந்திரன் பிரதமராக வேண்டும் என்று அநுரகுமார திஸநாயக்க நாடாளுமன்றத்துக்குத் தெரிவித்தார் என சுமந்திரன் மேற்படி கூட்டத்தில் கூறினார் என்பது உண்மை. அந்தக் கூட்டத்தில் நானும் அச்சமயம் மேடையில் பிரசன்னமாகி இருந்தேன். அப்படி கூறிய சுமந்திரன், எப்போது அந்தக் கருத்தை அநுரகுமார திஸநாயக்கா சொன்னார் என்று கேள்வி கேட்கும் போது அதற்கும் சரியான பதிலை அவர் தர வேண்டும். தர மறுத்தால் அல்லது தவறினால் அதையும் அம்பலப்படுத்துவேன்" – என்று அந்த புத்திஜீவி பிரமுகரிடம் உறுதி அளித்தேன்.

பந்தை சுமந்திரனின் களத்துக்குள் அடித்துப் பார்ப்போம். அவர் என்ன பதில் சொல்கிறார் என்பதை நாளை அல்லது அடுத்து வரும் தினங்களில் வாசகர்களுக்கு தெரிவிப்பேன். அதுவரை அந்தப் புத்திஜீவி நண்பரும் என் பதிலுக்காகக் காத்திருக்க வேண்டும்.

## பேராயருடன்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று சந்தித்து நாட்டின் தற்போதைய நிலைமைகள் குறித்து விரிவான பேச்சுகளை நடத்தியுள்ளார்.

இலங்கையில் சட்டத்தின் ஆட்சியை வலுப்படுத்துவதன் அவசியம் குறித்து இரு தரப்பினரும் நீண்ட நேரம் ஆலோசித்தனர். குறிப்பாக, நாட்டில் நீதியை நிலைநாட்டுவதில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள் மற்றும் எதிர்கால சவால்கள் குறித்துக் கருத்துப் பரிமாற்றங்கள் இடம்பெற்றன.

இலங்கையில் நீண்டகாலமாக எதிர்பார்க்கப்படும் தேசிய ஒற்றுமையை மேம்படுத்துவது குறித்தும், அனைத்துச் சமூகங்களுக்குமிடையிலான நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவது குறித்தும் கவனம் செலுத்தப்பட்டது. நீதிமிக்க முன்னேற்றப்பாதையை உருவாக்குவதற்கு அனைத்துத் தரப்பினரும் ஒன்றிணைந்து செயற்பட வேண்டியதன் முக்கியத்துவத்தை இருவரும் வலியுறுத்தினர்.

தற்போது நாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் கல்வி மறுசீரமைப்பு செயல்முறைகள் குறித்து இச்சந்திப்பில் விசேடமாகக் கலந்துரையாடப்பட்டது. அத்துடன், நாட்டின் நீண்டகால தேசிய அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் நிலைத்த வளர்ச்சியை உறுதிப்படுத்துவதற்கான வழிகள் குறித்தும் ஆராயப்பட்டது.

நாட்டின் சமூக மற்றும் அரசியல் சூழலில் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகை ஒரு செல்வாக்கு மிக்க குரலாக விளங்கும் நிலையில், சர்வதேச அமைப்பான ஐக்கிய நாடுகள் சபையின் பிரதிநிதியுடனான இந்தச் சந்திப்பு மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகின்றது.

குறிப்பாக உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் விசாரணை மற்றும் நீதி கோரல் தொடர்பாக ஐ.நா. சபையின் கரிசனைகள் இந்தச் சந்திப்பில் எதிரொலித்திருக்கலாம் என நம்பப்படுகின்றது.

## சர்வதேசக்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பிரித்தானியா, கனடா, மலாவி, மொண்டினீக்ரோ மற்றும் வடக்கு மசிடோனியா ஆகிய நாடுகள் அடங்கிய இந்த முக்கிய குழுவின் சார்பில், பிரித்தானியாவின் மனித உரிமைகள் தூதுவர் எலினோர் சாண்டர்ஸ் இந்த விசேட அறிக்கையைச் சமர்ப்பித்துள்ளார்.

அறிக்கையின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

### புதிய சட்டமூலம் குறித்த கவலை

தற்போது முன்மொழியப்பட்டுள்ள "பயங்கரவாதத்திலிருந்து அரசைப் பாதுகாப்புச் சட்டம்", முந்தைய சட்டத்தை விடவும் பாரிய மனித உரிமை மீறல் கவலைகளைத் தோற்றுவிப்பதாகக் குழு சுட்டிக்காட்டியுள்ளது. எந்தவொரு பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமும் இலங்கையின் சர்வதேச மனித உரிமைப் பொறுப்புகளுக்கு இணங்க அமைவது அவசியம் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

### காணி விடுவிப்பு மற்றும் நல்லிணக்கம்

இராணுவத்தின் வசமுள்ள காணிகள் சில விடுவிக்கப்பட்டுள்ளதை ஏற்றுக் கொண்டாலும், அந்தச் செயல்முறை மிகவும் மந்த கதியில் உள்ளதாகக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

மோதல்களில் உயிரிழந்தவர்களை நினைவு கூருவதற்கு அனைத்துச் சமூகங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டுள்ளமையை வரவேற்றுள்ள எலினோர் சாண்டர்ஸ், இது நல்லிணக்கத்துக்கு மிக அவசியம் என்று தெரிவித்துள்ளார்.

### ஜனாதிபதியின் வாக்குறுதிகளும் கள யதார்த்தமும்


நிலைமாறுகால நீதி, இனவாத எதிர்ப்பு மற்றும் மனித உரிமை மீறல் வழக்குகள் குறித்து ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க வழங்கிய வாக்குறுதிகளைக் குழு கவனத்தில் கொண்டுள்ளது. இருப்பினும், களத்தில் அதன் முடிவுகள் இன்னும் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே உள்ளன. சாட்சிகள், பாதிக்கப்பட்டவர்கள் மற்றும் ஊடகவியலாளர்கள் மீதான அச்சுறுத்தல்கள் தொடர்வதாகக் குழு குற்றஞ்சாட்டியுள்ளது.

திட்டமிடப்பட்டுள்ள "சுயாதீன அரச வழக்குத்தொடுநர் அலுவலகம்" வெறும் பேச்சளவில் இன்றிச் செயற்பாட்டுக்கு வர வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது.

மோதல் காலங்களில் இடம்பெற்ற பாலியல் வன்முறைகள் தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் அலுவலகத்தின் அறிக்கையை ஏற்றுக் கொண்டுள்ள குழு, பாதிக்கப்பட்டவர்களுக்குத் தகுந்த நீதி கிடைப்பதை இலங்கை அரசு உறுதி செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொண்டுள்ளது.

ஜூன் மற்றும் செப்டெம்பர் கூட்டத்தொடர்களிலேயே இலங்கை குறித்த விரிவான எழுத்துமூல அறிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் மீதான விவாதங்கள் இடம் பெறுவது வழக்கம். ஆனால், மார்ச் மாதம் நடைபெறும் இந்த 61ஆவது கூட்டத்தொடரில், இணை அனுசரணைக் குழு ஒரு "வாய்மொழி மூல அறிக்கை"யைச் சமர்ப்பித்துள்ளமையானது, இலங்கையைச் சர்வதேசக் கண்காணிப்பிலிருந்து விடுவிக்கச் சர்வதேச சமூகம் இன்னும் தயாராக வில்லை என்பதைக் காட்டுகின்றது.

விவாதங்கள் இல்லை என்று எதிர்பார்க்கப்பட்ட ஒரு கூட்டத்தொடரில், இவ்வாறானதொரு விரிவான மற்றும் விமர்சன ரீதியான அறிக்கை முன்வைக்கப்பட்டிருப்பது, எதிர்வரும் செப்டம்பர் மாதம் நடைபெறவுள்ள பிரதான கூட்டத்தொடருக்கான ஒரு "முன்னெச்சரிக்கை அறிவிப்பாகவே" கருதப்படுகின்றது.


GOLDEN VOICE
OF NORTH
குரல் தேர்வு
விரைவில்...!
a one
media network
MURASU
digital
tamil one
V
தமிழ்

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தீரா இடும்பை

விதி மாத்திரமல்ல, வினையும் வலியது. பற்றினால் இலகுவில் விட்டு விடாது. தன் கைவரிசையை காட்டியே தீரும். அதன் பின்தான் ஓயும்.

இலங்கையில் யுத்தத்தின் இறுதிக் கட்டத்தில் பல்லாயிரம் அப்பாவி தமிழர்களைக் கொன்றொழிக்கக் காரணமான யுத்த குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற விடயங்களில் ஈடுபட்ட தரப்புகள் பதில் கூறியேயாக வேண்டும். பொறுப்புக் கூறலை எதிர்கொண்டு, விளைவுகளைச் சந்தித்தேயாக வேண்டும். இலகுவில் தப்பிவிட முடியாது. காலம் செல்லலாம். வாய்ப்புகள் இழுபடலாம். ஆனால் என்றோ ஒரு நாள் உண்மைகள் வெளிப்பட்டு, தவறிழைத்தோர் நீதியின் முன் நிறுத்தப்பட்டேயாவார்கள்.

ஜெனிவாவில் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இந்த விவகாரத்தை ஒட்டி இலங்கையின் நிலைமை தொடர்ந்து சிக்கலுக்குரியதாகவே இருந்து வருகிறது.

ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் 61ஆவது கூட்டத்தொடர் தற்போது ஜெனிவாவில் நடைபெற்று வருகின்றது. கடந்த 23 ஆம் திகதி ஆரம்பமான இந்த நீண்ட கூட்டத் தொடர் இம்மாதம் 31 ஆம் திகதி வரை நடைபெறவுள்ளது.

இலங்கை விவகாரம் தொடர்பான அறிக்கைகள் மற்றும் விவாதங்கள் எவையும் இந்தக் கூட்டத் தொடரில் இல்லை என்பதுதான் ஒழுங்கு. இலங்கை விவகாரம் இந்த அமர்வுக்கான நிகழ்ச்சி நிரலில் இல்லை.

ஏற்கனவே கடந்த ஆண்டு செப்டெம்பர் மாதம் நடைபெற்ற ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் 60 ஆவது கூட்டத்தொடரின்போது இலங்கை நிலைமை குறித்து விரிவாக விவாதிக்கப்பட்டது. 'இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தல்' எனும் தீர்மானத்தை மேலும் இரு வருட காலத்துக்கு நடைமுறைப்படுத்துவதற்கு அப்போது முடிவு செய்யப்பட்டது.

அதன் பிரகாரம் இலங்கை விடயம் தொடர்பான ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் வோல்கர் டேர்க்கின் எழுத்துமூல அறிக்கை எதிர்வரும் செப்டெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் 63 ஆவது கூட்டத்தொடரிலும், விரிவான அறிக்கை அடுத்த ஆண்டு செப்டெம்பர் மாதம் நடைபெறவிருக்கும் 66 ஆவது கூட்டத்தொடரிலும் சமர்ப்பிக்கப்படும்.

ஆகவே இம்முறை நடைபெற்று வரும் 61 ஆவது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பில் அறிக்கைகள் எவையும் சமர்ப்பிக்கப்படமாட்டா என்பதுடன் விவாதங்களும் இடம்பெறா என்றுதான் கூறப்பட்டது.

ஆனால், அப்படியிருக்கவும் தற்போது நடைபெறும் 61 ஆவது கூட்டத்தொடரில், கவுன்ஸிலில் இலங்கை விடயத்தைக் கூட்டாகக் கையாளும் பிரித்தானியா, கனடா, மலாவி, மொண்டெனேக்ரோ மற்றும் வடக்கு மெசிடோனியா ஆகியவை அடங்கிய இணை அநுரணைக்குழு சார்பில் விசேட அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டிருக்கின்றது.

அந்த நாடுகள் சார்பில் பிரித்தானியாவின் மனித உரிமைகள் தூதுவர் எலினோர் சாண்டர்ஸ் இந்த அறிக்கையை முன்வைத்திருக்கின்றார்.

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தை முழுமையாக நீக்க வேண்டும், முன்மொழியப்பட்டுள்ள 'பயங்கரவாதத்திலிருந்து அரசை பாதுகாக்கும் சட்டம்' சர்வதேச மனித உரிமைப் பொறுப்புகளுக்கு இணங்கியதாக இருக்க வேண்டும், இராணுவம் வசமுள்ள காணிகளை விடுவித்தல், நிலைமாறுகால நீதி, இனவாதத்துக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் முக்கியமான மனித உரிமைமீறல் வழக்குகள் குறித்தெல்லாம்அதில் விவரிக்கப்பட்டுள்ளது.

யுத்த காலக் கொடூரங்கள் இலங்கைக்கு தீராத பிணியாகப் பற்றித் தொடர்ந்து தொல்லை கொடுத்துக் கொண்டேயிருக்கும் என்றே தோன்றுகின்றது.



# மன்னாரில் பெண்கள் நேற்று கவனவீர்ப்புப் போராட்டத்தில்

## அரசாங்க அதிபரிடம் மகஜர் கையளிப்பு

**(மன்னார் நிருபர் எஸ்.ஆர்.லெம்பேட்)**

நிதி அமைச்சினால் முன்மொழியப்பட்ட நுண் நிதி மற்றும் கடன் ஒழுங்குபடுத்தும் அதிகாரசபைச் சட்டத்திற்கு அமைவாக உள்ளூரில் சுய தொழிலில் ஈடுபடுவோரை – குறிப்பாக சமூக மட்டத்தில் சிறு சேமிப்பு மற்றும் கடன் சேவை வழங்கும் பெண்களை – இந்தச் சட்டத்துக்குள் கொண்டு வருவதால் தமக்கு ஏற்படவுள்ள பாதிப்புகளைக் கருத்தில் கொண்டு அதற்கு எதிராக மன்னார் மாவட்ட மாதர் அபிவிருத்தி ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நேற்றைய தினம் செவ்வாய்க்கிழமை மன்னார் மாவட்டச் செயலகத்திற்கு முன் கவனவீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்ட பெண்கள் மற்றும் சுய தொழில் முயற்சியாளர்கள் பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட பதாகைகளை ஏந்தியவாறு அமைதியான முறையில் கவனவீர்ப்பில் ஈடுபட்டனர்.

“கிராமிய சேமிப்பு திட்டங்களை அளித்து நிதி நிறுவனங்களுக்கும் வட்டிக்காரர்களுக்கும் வாய்ப்பளிக்காதே!“, “இச்சட்டம் பெண்களை அடிமையாக்க நுண் நிதி நிறுவனங்களுக்கு வாய்ப்பு அளிக்கிறது“, “இச்சட்டம் சுய உதவி குழுக்களின் சேமிப்புகளை ஆபத்திற்குள் தள்ளுகிறது“, “அவசர தேவைக்குஒ பணம் கிடைக்கும் ஒரே வழியான சமூக சேமிப்பு திட்டங்களை தடை செய்யாதே!“, “நாங்கள் இச்சட்டத்திற்கு எதிரானவர்கள் அல்லர். ஆனால் ஏழைகள் சமூக மட்ட சேமிப்பு இல்லாமல் எதிர் கொள்ளப் போகும் அவல நிலையை மீள் பரிசீலனை செய்யுங்கள்!“ போன்ற வாசகங்கள் கொண்ட பதாகைகளை ஏந்தி பெண்கள் கவனவீர்ப்பில் பட்டனர்.

தொடர்ந்து போராட்டத்தில் கலந்து கொண்ட பெண்கள் ஊர்வலமாக மன்னார் மாவட்டச் செயலகத்தின் நுழைவாயிலுக்குச் சென்று, அங்கு வைத்து ஜனாதிபதிக்கான மகஜரை மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் க.கனகேஸ்வரனிடம் கையளித்தனர்.

மகஜரை பெற்றுக்கொண்ட அரசாங்க அதிபர் அதனை உடனடியாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுப்பார் எனத் தெரிவித்தார்.











# பிரதம நீதியரசர் மன்னாரிற்கு விஜயம்

**(மன்னார் நிருபர்)**

இலங்கையின் பிரதம நீதியரசர் பிரீத்தி பத்மன் சூரசேன உத்தியோகபூர்வ பயணமாக நேற்றைய தினம் செவ்வாய்க் கிழமை காலை மன்னார் நீதிமன்றத்திற்கு விஜயம் செய்தார்.

இதன் போது மன்னார் மேல் நீதி மன்ற நீதிபதி ஏ.ஏ.ஆனந்தராஜா, மன்னார் நதுவான் ஐ.என்.றிஸ்வான், மேலதிக நீதுவான் எம்.எம். எப்.ஸிஹாரா மற்றும் சட்டத்தரணிகள், நீதிமன்ற உத்தியோகத்தர்கள் இணைந்து பிரதம நீதியரசரை வரவேற்றனர்.

அதனைத்தொடர்ந்து மன்னார் மேல் நீதிமன்ற கட்டடத்தில் பிரதம நீதியரசர் தலைமையில் கலந்துரையாடல் இடம் பெற்றது.

இதன் போது நீதிமன்ற செயல்பாடுகள் உள்ளடங்கலாகப் பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது.











# செம்மலை பெரியகுளக்கட்டு உடைப்பெடுத்துள்ளதால் ஏற்பட்டுள்ள பாதிப்புக்கள் குறித்து நேரடியாக ஆய்வு

## கமநல உதவி ஆணையாளரும் ரவிகரன் எம்.பியும் களத்தில்






**(விஜயரத்தினம் சரவணன்)**

முல்லைத்தீவு – செம்மலையில் உள்ள பெரியகுளம் உடைப்பெடுத்துள்ளதால் அப்பகுதியிலுள்ள மக்கள் எதிர்நோக்கும் பாதிப்புக்களை முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரும் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரனும் கடந்த 27 ஆம் திகதி நேரில் சென்று பார்வையிட்டனர்.

அந்தக் குளத்தை விரைந்து சீரமைப்பதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் கமநல உதவி ஆணையாளரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது வலியுறுத்தினார்.

முல்லைத்தீவு – செம்மலைப்பகுதியில் வன்னிமாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் கடந்த 22ஆம் திகதி மக்கள் குறைகேள் சந்திப்பொன்றை நடாத்தியிருந்தார்.

முல்லைத்தீவு – செம்மலை கமக்கார அமைப்பு, அந்தப் பிரிவிலுள்ள பெரிய குளத்தின் அணைக்கட்டு உடைப்பெடுத்துள்ளதாக அச்சமயம் நாடாளுமன்ற உறுப்பினருக்கு தெரியப்படுத்தியதுடன், நிலைமைகளும் நேரடியாகக் காண்பிக்கப்பட்டது.

சுமார் 75ஏக்கர் வயல்நிலங்களுக்கு நீர்ப்பாசனம் செய்யக்கூடிய அந்தக் குளத்தின் அணைக்கட்டு மூன்று இடங்களில் உடைப்பெடுத்துள்ளது.

இதனால் கடல்நீர் குளத்தினுள் உட்புகுவதால் வயல் நிலங்களுக்கு பாதிப்பு ஏற்படும் அபாயநிலை காணப்படுவதாகவும், கிராமத்தின் குடி தண்ணீரிலும் பாரிய தாக்கம் ஏற்பட வாய்ப்பிருப்பதாகவும் இதன்போது மக்களால் நாடாளுமன்ற உறுப்பினரிடம் முறையீடு செய்யப்பட்டது.

அத்தோடு அந்தக் குளத்தின் அணைக்கட்டை செம்மலை மற்றும் செம்மலை கிழக்கு கிராம மக்கள் மயானத்திற்கு செல்வதற்கான பாதையாகவும் பயன்படுத்தி வந்துள்ளனர்.

தற்போது அந்த அணைக்கட்டு உடைப்பெடுத்துள்ளதால் இறந்தவர்களின் உடலை மயானத்திற்கு எடுத்துச்செல்வதில் செம்மலை மற்றும் செம்மலை கிழக்கு கிராம மக்கள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றமை தொடர்பிலும் இதன்போது அப்பகுதி மக்களால் நாடாளுமன்ற உறுப்பினரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது.

இந்த குளத்தின் அணைக்கட்டைச் சீரமைத்துத் தருமாறு உரியவர்களுக்கு கமக்கார அமைப்புக்களினூடாக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டபோதும், இதுவரை அது தொடர்பில் கவனம் செலுத்தப்படவில்லையெனவும் இதன்போது அப்பகுதி மக்கள் முறையீடு செய்தனர்.

அத்தோடு செம்மலை கிழக்கு, புளியமுனைப்பகுதியில் செம்மலை மற்றும் செம்மலை கிழக்கு பகுதிகளைச் சேர்ந்த மக்களால் பெருமளவில் விவசாய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்ற நிலையில், புளியமுனைப் பகுதியில் அதிகரித்துள்ள காட்டுயானைகளின் கெடுபிடிகளால் தமது விவசாய நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டு வருகின்றன எனவும் இதன்போது அப்பகுதி மக்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

எனவே செம்மலை கிழக்கு புளியமுனைப் பகுதியில் யானைவேலி அமைப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அப்பகுதி மக்களின் பிரச்சினைகளையும், கோரிக்கைகளையும் கேட்டறிந்த நாடாளுமன்ற உறுப்பினர் மக்களால் முன்வைக்கப்பட்ட விடயங்கள் தொடர்பில் தம்மால் கவனஞ்செலுத்தப்படுமெனத் தெரிவித்தார்.

இதன்தொடர்சியாக கடந்த 23 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரை நேரில் சந்தித்த நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் இந்த விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினார்.

சம்பந்தப்பட்ட பகுதிக்கு நேரடியாக வருகை தந்து நிலைமைகளைப் பார்வையிட வேண்டுமென கமநல உதவி ஆணையாளரிடம் நாடாளுமன்ற உறுப்பினர் இதன்போது வலியுறுத்தியிருந்தார்.

சமந்தப்பட்ட குளக்கட்டுச் சீரமைப்பு மற்றும் யானைவேலி அமைப்பது தொடர்பில் தம்மால் கவனஞ்செலுத்தப்படுமெனத் தெரிவித்த கமநல உதவி ஆணையாளர், உடைப்பெடுத்துள்ள குளத்தை நேரடியாக வருகைதந்து தாம் பார்வையிடுவார் எனவும் தெரிவித்திருந்தார்.

அதன்படி கடந்த 27 ஆம் திகதி பெரிய குளம பகுதிக்கு கமநல உதவி ஆணையாளருடன் நாடாளுமன்ற உறுப்பினர் ரவிகரன் நேரடியாகச் சென்று பாதிப்பு நிலைமைகளை பார்த்துள்ளார்.

குளத்தின் சீரமைப்புப் பணியைத் துரிதப்படுத்துமாறும், புளியமுனைப் பகுதிக்கான யானை வேலியையும் விரைந்து அமைக்குமாறும் கமநல அபிவிருத்தி உதவி ஆணையாளரிடம் இதன்போது வலியுறுத்தப்பட்டது.

இந்த விடயங்கள் தொடர்பில் தம்மால் கவனஞ்செலுத்தப்படுமென கமநல உதவி ஆணையாளரால் இதன்போது பதில் வழங்கப்பட்டது. இந்தக் களஆய்வில் அப்பகுதி மக்களும் பங்கேற்றிருந்தனர்.



# முன்னேஸ்வரத்தில் நேற்றுத் தீர்த்தம்

(உடப்பு குறூப் நிருபர்)

வரலாற்றுள சிறப்பு வாய்ந்த முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா சமேத ஸ்ரீ முன்னைநாதர் சுவாமி ஆலயத்தின் வருடாந்த மாசி மக பிரமோற்சவத்தில் தீர்த்தம் நேற்று செவ்வாய்க்கிழமை காலை நடைபெற்றது.

காளைகள் இரண்டு பூட்டிய வண்டியில் அம்மன் தீர்த்தக்கரைக்கு ஊர்வலமாகச் சென்ற பின்னர் அங்கு தீர்த்தோற்சவம் நடைபெற்றது. நூற்றுக்கணக்கான பக்தர்கள் அங்கு தீர்த்தத்தில் கலந்து கொண்டனர்.







# ஆஸி தமிழ்ச் சங்கத்தின் ஆதரவில் மன்னாருக்கு ஒரு தொகுதி சுகாதாரப் பொருள்கள் வழங்கல்





ஆஸ்திரேலியா தமிழ்ச் சங்கத்தின் அனுசரணையில் வழங்கப்பட்ட ஒரு தொகுதி சுகாதார பொருள்கள் நேற்றைய தினம் முன்னாள் பிரதமரின் மத விவகாரங்களுக்கான இணைப்புச் செயலாளரும், அகில இலங்கை கிறிஸ்தவ அபிவிருத்தி ஒன்றியத்தின் தலைவருமான வணக்கத்துக்குரிய பிதா அருட்கலாநிதி எஸ். சந்துரு பெர்னாண்டோவினால் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரிடம் கையளிக்கப்பட்டன.

மன்னார் மாவட்ட வைத்தியசாலைகளுக்கு பகிர்ந்தளிக்கும் வகையிலேயே இந்தப் பொருள்கள் கையளிக்கப்பட்டன.

இதன் போது மன்னார் பொது சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ரூபன் லெம்பேட், மாவட்ட செயலக அதிகாரிகள், பாஸ்டர் பத்திநாதன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பசறையில் பாதசாரிக் கடவையில் வீதியை கடக்க முயன்ற பெண்ணுடன் மோதிய பஸ்



(நடராஜா மலர்வேந்தன்)

பதுளை – பசறை பிரதான வீதியின் 7ஆம் கட்டை பகுதியில் நேற்றொ பிற்பகல் இடம்பெற்ற சாலை விபத்தில் 45 வயதுடைய பெண் ஒருவர் படுகாய மடைந்துள்ளார்.

பதுளையிலிருந்து பிபிலை நோக்கி பயணித்த இலங்கை போக்குவரத்துச் சபைக்குச் சொந்தமான பஸ், பாதசாரிகளுக்கான வெள்ளைக்கோட்டு கடவை யூடாக வீதியை கடக்க முயன்ற பெண்ணுடன் மோதியதில் இந்த விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாதிக்கப்பட்டவர் பசறை, யூரி தோட்டம் தொழிற்சாலைப் பகுதியில் வசிக்கும் தேயிலைக் கொழுந்து பறிக்கும் தொழிலாளி ஆவார். மதிய உணவிற்காக அவர் வீட்டிற்குச் சென்றுவிட்டு, மீண்டும் வேலைக்குத் திரும்பும் வேளையில் வீதியைக் கடக்க முயன்றபோது இந்த அனர்த்தம் நிகழ்ந்துள்ளது.

காயமடைந்த பெண் உடனடியாக அருகிலிருந்தவர்களால் மீட்கப்பட்டு, சிகிச்சைக்காக பதுளை போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# தவிசாளர் நிரோஷின் கடமைக்கு இடையூறு சந்தேக நபருக்கு 14 நாள்கள் விளக்கமறியல்



வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷின் கடமைக்கு இடையூறு விளைவித்த வழக்கில் சந்தேகநபருக்கு 14 நாள்கள் விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கட்டப்பிராயில் அனுமதியற்ற சட்டவிரோத கட்டடம் ஒன்றை நீதிமன்ற உத்தரவின் பிரகாரம் இடித்து அழிக்கும் கடமையில் ஈடுபட்டிருந்த வலிகாமம் கிழக்கு பிரதேச சபைத் தவிசாளர் தியாகராஜா நிரோஷை வேறு பிரதேசத்தில் இருந்து அவ்விடத்திற்கு வருகை தந்த ஒருவர் தான் கூட்டிவந்த சகாவிடம் தொலைபேசியை வழங்கி, தான் தவிசாளருடன் பாதைப் பிரச்சினை ஒன்று தொடர்பாக முரண்பட வுள்ளமையை வீடியோ பதிவு செய்யுமாறு தெரிவித்துவிட்டு, தவிசாளரை நோக்கி அவதூறுப்படுத்தும் வகையிலும், அவரது கடமைக்கு இடையூறு ஏற்படுத்தும் விதத்திலும் செயற்பட்டுள்ளார்.

தங்களுக்கு ஏதாவது பிரச்சினைகள் இருப்பின் தம்மை அலுவலகத்தில் முறைப்படி அணுகுமாறு தெரிவித்தவிட்டு தவிசாளர் தமது கடமையில் நின்றார். இந் நிலையில் பொதுமக்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் முன்னிலையில் தவிசாளரை மரியாதைக் குறைவாக எச்சரித்திருந்தமையுடன் கடமைக்கு இடையூறாக செயற்பட்ட நிலையில் சம்பந்தப்பட்ட நபர் கைது செய்யப்பட்டார்.

தொடர்ந்து தனது கடமைக்கு இடையூறு விளைவிக்கப்பட்டதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் அந்நபருக்கு எதிராக தவிசாளர் வாக்குமூலமளித்திருந்தார்.

அதனையடுத்து, தவிசாளரின் கடமைக்கு இடையூறு விளைவித்தமைக்காக அந்நபர் கைதுசெய்யப்பட்டார். அவரை நேற்று செவ்வாய்க் கிழமை மேலதிக நீதிவான் நீதிமன்றில் கோப்பாய் பொலிஸார் முற்படுத்தியமையுடன் பி அறிக்கை தாக்கல் செய்தனர்.

இந்நிலையில் சந்தேகநபரை எதிர்வரும் 14 நாள்களுக்கு விளக்கமறியலில் வைக்க யாழ்ப்பாணம் மேலதிக நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டது. தவிசாளர் சார்பாக சட்டத்தரணி மோகனேஸ்வரன் ரமணனும், சந்தேக நபர் சார்பாக சட்த்தரணிகளான லக்சன் செல்வராஜா மற்றும் லவகாந்த் ஆகியோரும் மன்றில் முன்னிலையாகியிருந்தனர்.

# கிளிநொச்சி மாவட்ட வீடமைப்பு அபிவிருத்தி அரச அதிபர் தலைமையில் கலந்துரையாடல்









**(பூ.லின்ரன்)**

கிளிநொச்சி மாவட்டத்தின் வீடமைப்பு அபிவிருத்தி தொடர்பான கலந்துரையாடல் மாவட்ட அரசாங்கதிபர் சுப்பிரமணியம் முரளிதரன் தலைமையில் கிளிநொச்சி மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

மாவட்டத்தில் இந்திய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற வீடமைப்பு திட்டங்கள், வீடமைப்பு நிர்மாணத்துறை மற்றும் நீர்வழங்கல் அமைச்சினால் முன்னெடுக்கப்பட்டு வரும் வீடமைப்பு திட்டங்கள், 2018 காலப்பகுதியில் வீடமைப்பு அதிகார சபையினால் வழங்கப்பட்ட வீடமைப்பு திட்டங்களின் நிலை உள்ளிட்ட வீடமைப்பு தொடர்பான பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

இந்தக் கலந்துரையாடலில் பிரதேச செயலாளர்கள்,மாவட்ட வீடமைப்பு அதிகார சபை முகாமையாளர் எச்.பி. ஆர்.கருணாதிலக, மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர், வீடமைப்பு அதிகார சபை தொழில்நுட்ப உத்தியோகத்தர் கலந்து கொண்டனர்.




# தென்னாபிரிக்கா எதிர் நியூஸிலாந்து - ரி-20

## முதலாவது அரையிறுதி

## இன்று இரவு 7 மணி எடேன் ஹார்டன்ஸ்

**மொத்தப் போட்டிகள்: 19**
(இதுவரை இரு அணிகளும் மோதியவை)

**12** (வெற்றிகள்) — **7** (வெற்றிகள்)

### 15 பேர் கொண்ட தெ.ஆபிரிக்க அணி

டேவிட் மில்லர்
குயின்டன் டி கொக் (வி.கா.)
கேசவ் மகாராஜ்
ஜார்ஜ் லிண்டே
கார்பின் போஷ்
ககிசோ ரபாடா
ஜேசன் ஸ்மித்
அன்ரிச் நார்ட்ஜே
ஐடன் மார்க்ரம் (அ.த.)
லுங்கி என்கிடி
ரியான் ரிக்கல்டன் (வி.கா.)
மார்கோ ஜான்சன்
டிரிஸ்டன் ஸ்டப்ஸ்
டெவால்ட் ப்ரீவிஸ்
குவேனா மபகா

### ரி-20 உலகக் கிண்ணத் தொடர்களில் இரு அணிகளதும் பெறுபேறுகள்

| ஆண்டு | தெ.ஆபிரிக்கா | நியூஸிலாந்து |
|---|---|---|
| 2007 | சுப்பர்-8 | அரையிறுதி |
| 2009 | அரையிறுதி | சுப்பர்-8 |
| 2010 | சுப்பர்-8 | சுப்பர்-8 |
| 2012 | சுப்பர்-8 | சுப்பர்-8 |
| 2014 | அரையிறுதி | சுப்பர்-10 |
| 2016 | சுப்பர்-10 | அரையிறுதி |
| 2021 | சுப்பர்-12 | 2ஆம் இடம் |
| 2022 | சுப்பர்-12 | அரையிறுதி |
| 2024 | 2ஆம் இடம் | குழுநிலை |
| 2026 | அரையிறுதி | |

### 15 பேர் கொண்ட நியூஸிலாந்து அணி

ஜேம்ஸ் நீஷம்
டெவன் கான்வே (வி.கா.)
கோல் மெக்கோஞ்சி
டேரில் மிட்செல்
இஷ் சோதி
ஜேக்கப் டஃபி
மிட்செல் சாண்ட்னர் (அ.த.)
மார்க் சாப்மேன்
மேட் ஹென்றி
லாக்கி பெர்குசன்
கைல் ஜேமீசன்
டிம் சீஃபர்ட் (வி.கா.)
கிளென் பிலிப்ஸ்
பின் ஆலன்
ராச்சின் ரவீந்திர




# ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல முடியாமல் தவிக்கும் பயணிகளுக்கு உதவ தயாராகும் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ்

மத்திய கிழக்கில் ஏற்பட்டுள்ள போர் பதற்றம் காரணமாக வான்பரப்புகள் மூடப்பட்டு, முக்கிய சர்வதேச வானூர்தி சேவைகள் இரத்து செய்யப்பட்டுள்ள நிலையில், ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் தனது ஐரோப்பிய பயணங்களை வழக்கம் போல் முன்னெடுப்பதாக அறிவித்துள்ளது.

எமிரேட்ஸ், கட்டார் ஏர்வேஸ் மற்றும் எத்திஹாட் போன்ற முன்னனி வானூர்தி நிறுவனங்கள் தமது சேவைகளைத் தற்காலிகமாக நிறுத்தியுள்ளதால், லண்டன் உள்ளிட்ட ஐரோப்பிய நாடுகளுக்குச் செல்ல முடியாமல் தவிக்கும் பயணிகளுக்கு உதவத் தயாராக இருப்பதாக ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் தெரிவித்துள்ளது.

டுபாய், டோஹா மற்றும் அபுதாபி ஆகிய முக்கிய போக்குவரத்து மையங்கள் ஊடாகப் பயணிக்க முடியாமல் தவிக்கும் பயணிகள், ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் ஊடாகத் தமது பயணங்களை மேற்கொள்ள முடியும்.

இடவசதிக்கு ஏற்ப பாதிக்கப்பட்ட பயணிகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என மூத்த அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

எமிரேட்ஸ் வானூர்தி நிறுவனம் மார்ச் 2ஆம் திகதி பிற்பகல் 3 மணிவரை டுபாய்க்கான அனைத்து சேவைகளையும் நிறுத்தியுள்ளது.

மார்ச் 5 ஆம் திகதிக்கு முன் முன்பதிவு செய்தவர்கள் 20 நாட்களுக்குள் மீளப் பதிவு செய்யவோ அல்லது முழுப் பணத்தையும் திரும்பப் பெறவோ முடியும்.

அதேபோன்று கத்தார் ஏர்வேஸ் நிறுவனம் தோஹாவிற்கான சேவைகள் நிறுத்தப்பட்டுள்ளன.

பயணிகள் 7 நாள்களுக்குள் பயணத் திகதியை மாற்றிக்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மேலும் எத்திஹாட் நிறுவனம் பாதிக்கப்பட்ட பயணிகள் மார்ச் 18ஆம் திகதி வரை கட்டணமின்றி மீளப் பதிவு செய்ய அல்லது பணத்தைத் திரும்பப் பெற வசதி செய்துள்ளது.

இஸ்ரேலிய தாக்குதல்களுக்குப் பதிலடியாக ஈரான் நடத்திய ஏவுகணைத் தாக்குதல்களால், பாதுகாப்பு கருதி மத்திய கிழக்கின் பல நாடுகள் தமது வான்பரப்புகளைத் தற்காலிகமாக மூடியுள்ளன.

இதனால் பல்லாயிரக்கணக்கான பயணிகள் சர்வதேச வானூர்தி நிலையங்களில் தவித்து வருகின்றனர்.

விமான நிலையங்களுக்குப் புறப்படுவதற்கு முன்னர் தமது பயண முகவர்கள் அல்லது விமான நிறுவனங்களின் அலுவலகங்களைத் தொடர்புகொண்டு தற்போதைய நிலைமையை உறுதிப்படுத்துமாறு பயணிகள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

# மத்திய கிழக்கு போர்ச் சூழல்: சர்வதேச தபால் சேவை பாதிப்பு

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் நிலவும் போர் மற்றும் பதற்றமான சூழல் காரணமாக, இலங்கையின் சர்வதேச தபால் சேவைகளுக்கு பாரிய தடைகள் ஏற்பட்டுள்ளன என தபால் மா அதிபர் எஸ்.ஆர்.டபிள்யூ.எம்.ஆர்.பி. சத்குமார தெரிவித்துள்ளார்.

நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை குறிப்பிட்டார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மத்திய கிழக்கு நாடுகளுக்கான பெரும்பாலான விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளதால், தபால் பொதிகளை வெளிநாடுகளுக்கு அனுப்புவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது.

கடந்த வெள்ளிக்கிழமை பாரம் எடுக்கப்பட்ட பொதிகள் கூட இன்னும் அனுப்பப்படாமல் தேங்கிக் கிடக்கின்றன.

தபால் தாமதம் காரணமாக எளிதில் அழுகக்கூடிய அல்லது துர்மணம் வீசக்கூடிய பொருள்களை அனுப்புவதைத் தவிர்க்குமாறு அல்லது அதன் அவதானத்தை உணர்ந்து செயற்படுமாறு பொது மக்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர்.

நிலைமையை சீர்செய்ய அந்தந்த நாடுகளின் தபால் நிர்வாகங்களுடன் இலங்கை தபால் திணைக்களம் தொடர்பில் இருந்து வருகின்றது.

நிலைமை வழமைக்குத் திரும்பியவுடன் சர்வதேச தபால் சேவைகள் மீண்டும் வழமைபோல் ஆரம்பிக்கப்படும். என்று தபால் மா அதிபர் மேலும் தெரிவித்தார்.



# இலங்கை மாணவர்களுக்கு வாய்ப்பு; இந்திய அரசின் புலமைப்பரிசில்கள்

2026 - 2027 ஆம் ஆண்டுக்கான கல்வி அமர்வுகளுக்காக, தகுதிவாய்ந்த 200 இலங்கை மாணவர்களுக்கு முழுமையான புலமைப்பரிசில்களை வழங்குவதற்கு இந்திய அரசு முன்வந்துள்ளது.

இந்தியாவின் புகழ்பெற்ற கல்வி நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களில் பல்வேறு துறைகளில் பயில்வதற்கு இந்த வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

இருப்பினும், மருத்துவம், துணைமருத்துவம் மற்றும் சட்டத்துறைகளுக்கான படிப்புகள் இதில் உள்வாங்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

நேரு நினைவு புலமைப்பரிசில் திட்டம் பொறியியல், அறிவியல், வர்த்தகம், பொருளாதாரம், கலை மற்றும் மானுடவியல் போன்ற துறைகளில் இளங்கலை, முதுகலை மற்றும் கலாநிதி படிப்புகளுக்கு இது பொருந்தும்.

மௌலானா அசாத் புலமைப்பரிசில் திட்டம் முதுகலை பட்டப்படிப்புகளுக்கானது. இதில் பொறியியல், அறிவியல் மற்றும் விவசாயத் துறைகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

ராஜீவ் காந்தி புலமைப்பரிசில் திட்டம் தகவல் தொழில்நுட்பத் துறையில் இளங்கலை பொறியியல் மற்றும் இளங்கலைதொழில்நுட்பபடிப்புகளுக்குமுன்னுரிமை அளிக்கப்படும்.

ஏ.பி.ஜே. அப்துல் கலாம் கொமன்வெல்த் புலமைப்பரிசில் திட்டம்:

பொறியியல், அறிவியல், வர்த்தகம் உள்ளிட்ட பல்வேறு துறைகளில் இளங்கலை, முதுகலை மற்றும் கலாநிதி படிப்புகளுக்கு வாய்ப்பு வழங்கப்படும்.

மேற்கூறிய திட்டங்கள் ஒவ்வொன்றும் பாடநெறியின் முழு காலத்திற்கும் முழு கல்விக் கட்டணம், மாதாந்திர உணவுப் படி மற்றும் புத்தகங்கள் மற்றும் எழுது பொருட்களுக்கான வருடாந்திர மானியம் ஆகியவற்றை உள்ளடக்கியது என்று இந்திய உயர் ஸ்தானிகராலயம் கூறுகிறது.

கூடுதலாக, இந்தியாவில் அருகிலுள்ள இடத்திற்கு விமானக் கட்டணம் மற்றும் நாட்டின் பல்வேறு பகுதிகளுக்கு கல்விச் சுற்றுலாக்களுக்கான வருடாந்திர மானியம், பல துணைச் சலுகைகள் தவிர, வழங்கப்படுகிறது.

தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர்களுக்கு அந்தந்த வளாகத்திற்குள் விடுதி வசதிகளும் வழங்கப்படும்.

இலங்கை கல்வி அமைச்சின் ஆலோசனையுடன், திறமை மற்றும் தகுதியின் அடிப்படையிலேயே மாணவர்கள் தெரிவு செய்யப்படுவர்.

இது குறித்த மேலதிக விவரங்கள் மற்றும் தகுதி அளவுகோல்கள் விரைவில் கல்வி அமைச்சின் உத்தியோகபூர்வ இணையதளமான www.mohe.gov.lk இல் வெளியிடப்படும்.

மேலதிக விபரங்களுக்கு கொழும்பிலுள்ள இந்திய உயர்ஸ்தானிகராலயத்தை (eduwing.colombo@mea.gov.in) அல்லது இலங்கை கல்வி அமைச்சினைத் தொடர்புகொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

# ஆண்டின் இதுவரையான காலத்தில் 13,416 டெங்கு நோயாளர்கள் பதிவு



இலங்கையில் இந்த ஆண்டு இதுவரையான காலப்பகுதியில் மொத்தம் 13,416 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர் என தேசிய டெங்கு கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது.

மேற்படி பிரிவின் சமூக மருத்துவ நிபுணர் பிரஷீலா சமரவீர இதனைத் தெரிவித்துள்ளார்.

கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களிலேயே அதிகளவான நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அதேவேளை காலி, மாத்தறை மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்களிலும் டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், டெங்கு காரணமாக இந்த ஆண்டு இதுவரை நான்கு மரணங்கள் பதிவாகியுள்ளன என அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

இந்தநிலையில், தற்போது நிலவும் சூழலைக் கருத்தில் கொண்டு, காய்ச்சல் இரண்டு நாள்களுக்கு மேல் நீடித்தால் தகுதியுள்ள மருத்துவரிடம் சிகிச்சை பெறுமாறு சமூக மருத்துவ நிபுணர் பிரஷீலா சமரவீர பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.



# மத்திய கிழக்கு போரால் சுற்றுலாத்துறைக்கு வாரத்திற்கு 12 மில்லியன் டொலர்கள் இழப்பு

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழல் காரணமாக, மார்ச் மாதத்தில் எதிர்பார்க்கப்பட்ட சுற்றுலாப் பயணிகளின் இலக்கை அடைய முடியாமல் போயுள்ளதாக சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் ருவான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தற்போதைய பதற்றமான சூழலால் சுற்றுலாத்துறை மூலம் இலங்கைக்கு கிடைக்க வேண்டிய வருமானத்தில் வாரத்திற்கு 10 முதல் 12 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வரை இழப்பு ஏற்படுவதாக பிரதி அமைச்சர் ருவான் ரணசிங்க சுட்டிக்காட்டினார்.

ஐரோப்பிய நாடுகளிலிருந்து மத்திய கிழக்கு ஊடாக (டுபாய், அபுதாபி, கட்டார்) வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது.

மார்ச் மாதத்தில் 3 இலட்சம் சுற்றுலாப் பயணிகளை எதிர்பார்க்கப்பட்ட போதிலும், இந்த முடக்கம் காரணமாக அதில் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்தார்.

இலங்கையின் பிரதான சுற்றுலாச் சந்தையான இந்தியா மற்றும் சீனா, அவுஸ்திரேலியா, அமெரிக்கா ஆகிய நாடுகளிலிருந்து வரும் பயணிகளின் எண்ணிக்கையில் எவ்வித மாற்றமும் இல்லை.

ஐரோப்பிய பயணிகளுக்காக ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் மாற்று வான்வழிகள் ஊடாக நேரடி விமான சேவைகளை முன்னெடுத்து வருகின்றது. எனினும் எதிஹாட், கட்டார் ஏர்வேஸ் போன்ற நிறுவனங்கள் இன்னும் தமது சேவைகளை மீள ஆரம்பிக்கவில்லை என சுற்றுலாத்துறை பிரதி அமைச்சர் ருவான் ரணசிங்க தெரிவித்துள்ளார்.

மத்திய கிழக்கில் உள்ள இலங்கையர்கள் நாடு திரும்ப விரும்பினால், தூதரகங்கள் ஊடாகத் தொடர்புகொள்ளுமாறு அரசாங்கம் கேட்டுக்கொண்டுள்ளது.

# மீனவர்களுக்கான எரிபொருளை உரியவாறு வழங்க நடவடிக்கை

## அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவிப்பு



கடற்றொழிலாளர்களுக்கு தேவையான எரிபொருளை உரியவாறு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று எழுப்பிய கேள்விக்கு பதில் வழங்கிய போதே அமைச்சர் சந்திரசேகர் இந்த விடயத்தை குறிப்பிட்டார்.

நாட்டில் தற்போது செயற்கையாக ஏற்படுத்தப்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டுக்கான நிலைமை ஓரிரு வாரங்களில் வழமைக்கு திரும்பம் என அவர் கூறியுள்ளார்.

எவ்வாறாயினும், கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருளை விநியோகிப்பதற்கான பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அதன்படி, எரிபொருளை பெற்றுக் கொள்வதற்கு கடற்றொழிலாளர்கள் ஏதேனும் சிக்கலை எதிர்நோக்கினால், அதனை உடனடியாக தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் சுட்டிக்காட்டியுள்ளார்.

# ஈரான் மீதான தாக்குதல் குறித்து அரசின் மௌனம் பாரதூரமானது

## முஜிபுர் ரஹ்மான் எம்.பி கடும் சாடல்



ஈரான் மீதான தாக்குதல் மற்றும் அந்நாட்டின் ஆன்மீகத் தலைவர் படுகொலை செய்யப்பட்டமை தொடர்பில் இலங்கை அரசாங்கம் மௌனம் காக்கின்றமையை ஏற்றுக்கொள்ள முடியாது என நாடாளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றம் சபாநாயகர் ஜகத் விக்ரமரத்ன தலைமையில் நேற்று கூடியது.அதன் போது உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

“மத்திய கிழக்கு பிராந்தியத்தில் ஏற்பட்டுள்ள போர்ச் சூழல் உலகையே அச்சத்தில் ஆழ்த்தியுள்ள நிலையில், இது இலங்கையின் பொருளாதாரத்திலும் நேரடி தாக்கத்தை ஏற்படுத்தும் விடயமாகும்.

மத்திய கிழக்கு பிராந்தியத்தில் சுமார் 10 இலட்சம் இலங்கையர்கள் தொழில் புரிந்து வருவதால், அங்கு ஏற்படும் பதற்றம் இலங்கையின் எதிர்காலப் பயணத்தைப் பாதிக்கும்.

எண்ணெய் மற்றும் எரிவாயு விநியோகத்தில் சிக்கல்கள் எழுந்துள்ளமை நாட்டின் பொருளாதாரத்தை நேரடியாகப் பாதிக்கும்.

உலகளாவிய ரீதியில் ஏற்பட்டுள்ள இந்தப் பதற்றநிலை இலங்கையின் பொருளாதார முன்னேற்றத்திற்குத் தடையாக அமையும்.

ஈரான் மீதான தாக்குதல் மற்றும் அந்நாட்டுத் தலைவரின் படுகொலைக்கு எதிராக அரசாங்கம் ஒரு கண்டனத் தீர்மானத்தைக் கூட நாடாளுமன்றத்தில் முன்வைக்கவில்லை.

ஜனாதிபதி இது குறித்து நேரடியாகப் பேசாமல், அமைச்சர்கள் கூற வேண்டிய விடயங்களையே நாடாளுமன்றத்தில் உரையாற்றுகின்றார்.

முன்னைய காலங்களில் அமெரிக்கா மற்றும் இஸ்ரேலின் செயற்பாடுகளுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்கள், தற்போது ஆட்சியில் இருக்கும்போது மௌனமாக இருப்பது அவர்களின் சந்தர்ப்பவாத அரசியலைக்காட்டுகின்றது.

தற்போதைய அரசாங்கம் சர்வதேச அழுத்தங்களுக்குப் பணிந்துவிட்டது.ஈரான் விவகாரத்தில் சர்வதேச நாடுகள் பலவும் கண்டனங்களை வெளியிட்டு வரும் நிலையில், இலங்கையின் தற்போதைய மௌனம் அந்நாட்டின் நீண்டகால வெளிநாட்டுக் கொள்கைக்கு முரணானது.” என்று தெரிவித்தார்.

## மத்திய கிழக்கு போர் பதற்றம்:

# இலங்கைக்கு ஏற்படவுள்ள ஆபத்து: ஜனாதிபதிக்கு ஜி.எல். பீரிஸ் கடிதம்



மத்திய கிழக்கில் நிலவும் அசாதாரண சூழ்நிலை காரணமாக இலங்கை எதிர்கொள்ள வேண்டியுள்ள கடுமையான பொருளாதார மற்றும் சமூக பாதிப்புகள் குறித்து, பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் ஜனாதிபதிக்கு அவசர கடிதம் ஒன்றை அனுப்பியுள்ளார்.

ஜி.எல். பீரிஸ் ஜனாதிபதிக்கு குறித்த கடிதத்தை நேற்று அனுப்பி வைத்துள்ளார்.

அரசாங்கம் தனது நிலைப்பாட்டை உடனடியாக தெளிவுபடுத்த வேண்டும் என வலியுறுத்தியுள்ள அவர், சுட்டிக்காட்டியுள்ள நான்கு முக்கிய பாதிப்புகள் வருமாறு:

உலகச் சந்தையில் மசகு எண்ணெய் விலை அதிகரிப்பால், இலங்கையில் எரிபொருள் விலை உயரும் அபாயம் உள்ளது. இது ஏற்கனவே பொருளாதார ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ள மக்களின் வாழ்க்கைச் செலவை மேலும் அதிகரிக்கும்.

இராணுவ நடவடிக்கைகள் காரணமாக மத்திய கிழக்கு நாடுகளுக்கான சந்தை வாய்ப்புகள் பாதிக்கப்படும். இதனால் குறிப்பாக இலங்கையின் தேயிலை ஏற்றுமதி வருமானம் பெருமளவில் குறைய வாய்ப்புள்ளது.

வான்வழிப் பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக ஐரோப்பா, அமெரிக்கா மற்றும் வளைகுடா நாடுகளின் சுற்றுலாப் பயணிகள் தமது இலங்கைக்கான பயணங்களை இரத்து செய்து வருகின்றனர். இது ஹோட்டல் துறையை கடுமையாகப் பாதித்துள்ளது.

வளைகுடா நாடுகளில் பணிபுரியும் இலங்கைத் தொழிலாளர்கள் அனுப்பும் பணம் தடைப்படும் சூழல் உருவாகியுள்ளது. இது நாட்டின் அந்நியச் செலாவணி கையிருப்பில் தாக்கத்தை ஏற்படுத்தும். என அவர் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

## மத்திய கிழக்கில் தொடரும் பதற்றம்:

# ஓமன், குவைத் தலைவர்களுடன் பேச்சு நடத்தினார் பிரதமர் மோடி



ஓமன், குவைத் நாடுகளின் தலைவர்களுடன் தொலைபேசியில் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, அந்நாடுகளில் நடத்தப்பட்ட தாக்குதல்கள் குறித்து கவலை தெரிவித்துள்ளார்.

இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து ஈரான் மீது தாக்குதலை தொடங்கிய நிலையில், பதிலுக்கு இஸ்ரேலுக்கு எதிராகவும் மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க நிலைகள் மற்றும் நிறுவனங்களுக்கு எதிராகவும் ஈரான் தாக்குதல்களை நடத்தி வருகிறது. ட்ரோன்கள் மூலமாகவும் ஏவுகணைகள் மூலமாகவும் தாக்குதல்கள் நடத்தப்படுகின்றன.

சவூதி அரேபியாவின் ரியாத் நகரில் உள்ள அமெரிக்க தூதரகமும், குவைத்தில் உள்ள அமெரிக்க தூதரகமும் ஈரானின் தாக்குதலுக்கு உள்ளாகின.

இந்நிலையில், ஓமன் சுல்தான் ஹைதம் பின் தாரிக் மற்றும் குவைத் இளவரசர் சபா அல் காலித் அல் ஹமாத் அல் முபாரக் அல் சபா ஆகியோருடன் தனித்தனியே தொலைபேசியில் பிரதமர் நரேந்திர மோடி உரையாடியுள்ளார் என அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

“வளைகுடா பிராந்தியத்தின் இரண்டு முக்கிய தலைவர்களுடன் பிரதமர் நேற்று பிற்பகல் பேசினார். ஓமான் சுல்தான் ஹைதம் பின் தாரிக் அவர்களுடன் தொலைபேசி உரையாடல் மேற்கொண்டார். மேலும் குவைத் இளவரசர் ஷேக் சபா அல்-காலித் அல்-ஹமத் அல்-முபாரக் அல்-சபா அவர்களுடனும் பேசினார்,” என்று அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

மேற்கு ஆசியாவில் நடந்து வரும் மோதல் பின்னணியில், அந்த நாடுகளில் நடந்த தாக்குதல்கள் குறித்து பிரதமர் கவலை தெரிவித்தார் என்று அதிகாரிகள் தெரிவித்தனர். இந்த உரையாடல்களின் போது, அந்நாடுகளில் வசிக்கும் இந்தியர்களின் நலன் மற்றும் பாதுகாப்பு குறித்தும் விவாதிக்கப்பட்டுள்ளது.

முன்னதாக, பஹ்ரைன் மன்னர் ஹமத் பின் இசா அல் கலிபா, சவூதி அரேபிய இளவரசர் முகம்மதுபின் சல்மான் ஆகியோருடன் பிரதமர் நரேந்திர மோடிபேசியிருந்தார். அப்போது, அந்நாடுகளின் இறையாண்மை மற்றும் ஒருமைப்பாட்டை மீறும் வகையில் நடத்தப்பட்ட தாக்குதல்களை அவர் கண்டித்தார். இந்த கடினமான நேரத்தில் அந்நாட்டு மக்களுடன் இந்தியா ஒற்றுமையுடன் நிற்பதாக அவர் தெரிவித்தார்.

ஜோர்டான் மன்னர் இரண்டாம் அப்துல்லாவிடம் பேசிய பிரதமர் நரேந்திர மோடி, பிராந்தியத்தில் ஏற்பட்டு வரும் சூழல் குறித்து ஆழ்ந்த கவலை தெரிவித்தார். ஐக்கிய அபு அமீரக தலைவர் முகமது பின் ஜாயெத் அல் நயான், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு ஆகியோருடனும் பிரதமர் மோடி உரையாடியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# மத்திய கிழக்கு மோதலை விரைவில் முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்

## இந்தியா வலியுறுத்தல்



புனித ரமலான் மாதத்தில் ஈரான் மற்றும் வளைகுடா நாடுகளில் மோதல் தீவிரமடைவது கவலை அளிப்பதாக தெரிவித்துள்ள இந்தியா, இந்த மோதலை விரைந்து முடிவுக்கு கொண்டுவர வேண்டும் என்று கேட்டுக்கொண்டுள்ளது.

இது தொடர்பாக இந்திய வெளியுறவுத் துறை செய்தித் தொடர்பாளர் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

“கடந்த பெப்ரவரி 28 அன்று ஈரான் மற்றும் வளைகுடா பிராந்தியத்தில் மோதல் தொடங்கியபோது, இந்தியா தனது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்திருந்தது.

அனைத்து தரப்பினரும் நிதானத்தைக் கடைப்பிடித்து, பதற்றம் அதிகரிக்காமல் தவிர்த்து, பொதுமக்களின் பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று இந்தியா அப்போது வலியுறுத்தியது. எனினும், புனித ரமலான் மாதத்தில், அந்தப் பிராந்தியத்தில் நிலைமை தொடர்ந்து மோசமடைந்து வருகிறது.

கடந்த சில நாள்களில் மோதல் தீவிரமடைந்ததோடு, அது பிற நாடுகளுக்கும் பரவியுள்ளதை நாம் பார்க்கிறோம். அழிவும் உயிரிழப்புகளும் அதிகரித்துள்ளன. மக்களின் இயல்பு வாழ்க்கையும் பொருளாதார செயல்பாடுகளும் தடைபட்டுள்ளன. அந்தப் பிராந்தியத்தின் பாதுகாப்பு மற்றும் நிலைத்தன்மையில் முக்கிய அக்கறை கொண்ட அண்டை நாடு என்ற வகையில், நடைபெற்று வரும் சம்பவங்கள் மிகுந்த பதற்றத்தை ஏற்படுத்துகின்றன.

வளைகுடா பிராந்தியத்தில் சுமார் ஒரு கோடி இந்தியர்கள் பணியாற்றுகிறார்கள். அவர்களின் பாதுகாப்பும் நலனும் மிக மிக முக்கியம். அவர்களுக்கு பாதகமாக இருக்கும் எந்தப் போக்கையும் நாம் புறக்கணிக்க முடியாது. இந்தியாவின் வர்த்தகமும் எரிசக்தியை வழங்கும் சங்கிலிகளும் இந்தப் பிராந்தியத்தோடு தொடர்புடையவை. பெரிய அளவிலான எந்தவொரு இடையூறும் இந்திய பொருளாதாரத்திற்கு அதிக பாதிப்புகளை ஏற்படுத்தும்.

வணிகக் கப்பல்களுக்கு எதிரான தாக்குதல்களை இந்தியா உறுதியாக எதிர்க்கிறது. கடந்த சில நாட்களில், இத்தகைய தாக்குதல்களின் விளைவாக சில இந்தியர்கள் உயிரிழந்ததோடு, சிலர் காணாமல் போயுள்ளனர்.

இந்தப்பின்னணியில், பேச்சுவார்த்தை மற்றும் தூதரக நடவடிக்கைகள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண வேண்டும் என்பதான அழைப்பை இந்தியா வலுவாக மீண்டும் முன்வைக்கிறது. மோதல் விரைவாக முடிவுக்கு கொண்டுவரப்பட வேண்டும் என்பதற்காக நாங்கள் தெளிவாக குரல் எழுப்புகிறோம். ஏற்கெனவே பலர் உயிரிழந்துள்ளனர். அதற்காக நாங்கள் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவிக்கிறோம்.

பாதிக்கப்பட்ட நாடுகளில் உள்ள இந்தியத் தூதரகங்களும் துணைத் தூதரகங்களும் அங்கு வசிக்கும் இந்தியர்கள் மற்றும் சமூக அமைப்புகளுடன் தொடர்ந்து தொடர்பில் இருந்து, தேவையான ஆலோசனைகளை வழங்கி வருகின்றன. மோதல் காரணமாக சிக்கியுள்ளவர்களுக்குதேவையானஅனைத்து உதவிகளையும் அவை வழங்கியுள்ளன. இந்த மோதலால் ஏற்பட்டுள்ள பல்வேறு தூதரக அம்சங்களைச் சமாளிக்க அவை தொடர்ந்து செயல்படும்.

அந்தப் பிராந்திய அரசுகளுடனும், பிற முக்கிய கூட்டாளர்களுடனும் நாங்கள் தொடர்பில் உள்ளோம். பிரதமரும் வெளியுறவு அமைச்சரும் தலைவர்களுடன் ஆலோசனைகளை மேற்கொண்டுள்ளனர். நிலைமையை தொடர்ச்சியாகவும், நெருக்கமாகவும் கண்காணித்து வரும் அரசு, தேசிய நலனுக்கேற்ப தேவையான முடிவுகளை எடுத்து வருகிறது. தொடர்ந்து எடுக்கும்.” என தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ஈரான் ஏவுகணை உற்பத்தி ஆலைகள் மீது அமெரிக்க போர் விமானங்கள் தாக்குதல்

ஈரானில் பூமிக்கு அடியில் சுமார் 1,600 அடி ஆழத்தில் செயல்படும் ஏவுகணை உற்பத்தி ஆலைகளை குறிவைத்து அமெரிக்க விமானப் படையின் அதிநவீன பி-2 போர் விமானங்கள் தீவிர தாக்குதல் நடத்தி வருகின்றன.

ஈரானின் பல்வேறு பகுதிகளில் பூமிக்கு அடியில் சுமார் 1,600 அடி ஆழத்தில் ஏவுகணை உற்பத்தி ஆலைகள் செயல்படுகின்றன. இவை ஏவுகணை நகரங்கள் என்று அழைக்கப்படுகின்றன.

அமெரிக்கா, இஸ்ரேல் உளவுத் துறை தகவல்களின்படி ஈரான் தலைநகர் டெஹ்ரான், கெர்மன் ஷா, செம்னான் உள்ளிட்ட பகுதிகளில் பூமிக்கடியில் சுமார் 5 ஏவுகணை ஆலைகள் செயல்பட்டு வருவதாக தெரிகிறது. அந்த ஆலைகளை போர் விமானங்களில் இருந்து வீசப்படும் சக்திவாய்ந்த வெடிகுண்டுகளால் அழிக்க முடியாது. சில நூறு அடி ஆழத்துக்கு பூமியை துளைத்துச் சென்று, பின்னர் வெடித்துச் சிதறும் அதிநவீன வெடிகுண்டுகளால் மட்டுமே அழிக்க முடியும்.

அந்த வகையில் அமெரிக்காவிடம் ஜி.பி.யு -57 என்ற சக்திவாய்ந்த வெடிகுண்டுகள் உள்ளன. இந்த வெடிகுண்டுகள் பூமியை துளைத்துச் சென்று, வெடித்துச் சிதறும் தன்மை கொண்டவை. 20.5 அடி நீளம், 2.6 அடி விட்டம், 14,000 கிலோ எடை கொண்ட ஜி.பி.யு -57 வெடிகுண்டுகளை அமெரிக்காவின் எப் - 16, எப் - 22, எப் - 35 உள்ளிட்ட அதிநவீன போர் விமானங்களால் சுமந்து செல்ல முடியாது.

அமெரிக்க விமானப் படையின் பி-2 ரக போர் விமானத்தால் மட்டுமே ஜி.பி.யு -57 வெடிகுண்டுகளை சுமந்து செல்ல முடியும். ஒரு பி-2 போர் விமானத்தில் 2 ஜி.பி.யு -57 வெடிகுண்டுகளை மட்டுமே பொருத்த முடியும்.

ஈரான் இராணுவத்தின் மிகப்பெரிய பலமாக ஏவுகணைகள் விளங்குகின்றன. அந்த நாட்டிடம் 300 கி.மீ. முதல் 3,000 கி.மீ. தொலைவு வரை பாயும் திறன் கொண்ட ஏவுகணைகள் உள்ளன. இந்த ஏவுகணைகள் மூலமாக இஸ்ரேல் மற்றும் மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள அமெரிக்க இராணுவ தளங்கள் மீது ஈரான் இராணுவம் தொடர் தாக்குதல்களை நடத்தி வருகிறது.

இதை முறியடிக்க ஈரானின் ஏவுகணை உற்பத்தி ஆலைகள் மற்றும் சேமிப்பு கிடங்குகளை முழுமையாக அழிக்க அமெரிக்க இராணுவம் திட்டமிட்டு உள்ளது. இதற்காக அமெரிக்காவில் இருந்து நான்கு பி-2 போர் விமானங்கள் வரவழைக்கப்பட்டு உள்ளன.

172 அடி அகலம், 69 அடி நீளம் கொண்ட பி-2 போர் விமானங்களை இஸ்ரேல் மற்றும் மத்திய கிழக்கில் உள்ள அமெரிக்க விமானப் படைத் தளங்களில் தரையிறக்க முடியாது. அமெரிக்காவின் மிசோரியில் உள்ள வொயிட்மேன், குவாமில் உள்ள ஆண்டர்சன் விமானப் படைத் தளங்களில் மட்டுமே பி-2 போர் விமானங்களை கையாள முடியும்.

இவை தவிர இந்திய பெருங்கடலில் அமெரிக்கா, பிரிட்டன் இணைந்து நிர்வகிக்கும் டியாகோ கார்சியா தீவில் உள்ள விமானப் படைத் தளம், பிரிட்டனின் குளோஸ்டர்ஷையர் விமானப் படைத் தளத்தில் மட்டுமே பி-2 விமானத்தை தரையிறக்க முடியும். ஆனால் இந்த விமானப் படைத் தளங்களை அமெரிக்கா பயன்படுத்த பிரிட்டிஷ் பிரதமர் கெய்ர் ஸ்டார்மர் முதலில் அனுமதி வழங்க மறுத்ததாகவும், 48 மணி நேர கால தாமதத்துக்குப் பிறகு அனுமதி வழங்கியதாகவும் கூறப்படுகிறது.

தற்போது குளோஸ்டர்ஷையர், டியாகோ கார்சியா தளங்களில் இருந்து பி-2 போர் விமானங்கள் புறப்பட்டு ஈரானின் ஏவுகணை ஆலைகள் மீது ஜி.பி.யு - 57, ஜி.பி.யு - 30, பி.எல்.யு-109 ரக வெடிகுண்டுகளை வீசி வருகின்றன.

இதுகுறித்து அமெரிக்க இராணுவ வட்டாரங்கள் கூறியதாவது: ஈரானின் ஏவுகணை ஆலைகள் எந்தெந்த இடங்களில் உள்ளன என்பது குறித்து இதுவரை உறுதியான தகவல்கள் கிடைக்கவில்லை. உளவுத் துறை அளித்துள்ள தகவல்களின் அடிப்படையில் டெஹ்ரான் உள்ளிட்ட சில பகுதிகளை குறிவைத்து பி-2 போர் விமானங்கள் குண்டுகளை வீசி வருகின்றன.

ஈரான் ஏவுகணை ஆலைகள் குறித்த துல்லியமான தகவல்கள் கிடைக்கும் போது அந்த ஆலைகள் பி-2 போர் விமானங்களால் தரைமட்டமாக்கப்படும். ஈரானின் இராணுவ பலம் முழுமையாக அழிக்கப்படும் என்று தெரிவித்துள்ளன.







# ஓமன் கடல் பகுதியில் ஈரான் ட்ரோன் தாக்குதல்

## 3 இந்தியர்கள் உயிரிழப்பு

ஓமன் கடல் பகுதியில் ஈரான் நடத்திய தாக்குதலில் 3 இந்தியர்கள் உயிரிழந்துள்ளனர்.

ஓமன் கடற்பகுதியில், தலைநகர் மஸ்கட்டில் இருந்து 52 கடல்மைல் தொலைவில் மார்ஷல் தீவுகள் கொடியுடன் சென்று கொண்டிருந்த எம்கேடி வியோம் என்ற சரக்கு கப்பல் மீது ட்ரோன் படகு மூலம் ஈரான் தாக்குதல் நடத்தியது. இதில் சரக்கு கப்பலின் இன்ஜின் அறையில் தீப்பற்றியதில் இந்திய மாலுமி ஒருவர் உயிரிழந்தார். இதை ஓமனில் உள்ள இந்திய தூதரகம் உறுதி செய்துள்ளது.

இதனிடையே, ஓமன் நாட்டின் முசந்தம் தீபகற்பம் அருகே பலாவ் கொடியுடன் சென்ற ஸ்கைலைட் என்ற எண்ணெய் கப்பல் ஈரானால் குறிவைக்கப்பட்டது. இதில் இந்திய கப்பல் ஊழியர்கள் இருவர் உயிரிழந்தனர். மேலும் 3 இந்திய ஊழியர்கள் காயம் அடைந்தனர்.

மேலும், எல்.சி.டி. அலிஹ் கப்பல் மீதான ஈரான் தாக்குதலில் இந்திய மாலுமி ஒருவர் படுகாயம் அடைந்தார். மொத்தத்தில், மேற்கு ஆசியா முழுவதும் ஈரான் தாக்குதல்களில் 20 இந்தியர்கள் காயம் அடைந்துள்ளனர்.

இந்தச் சம்பவங்கள் இந்த பிராந்தியத்தில் கடல்சார் பாதுகாப்பின்மை தீவிரம் அடைந்துள்ளதை காட்டுகிறது. மேலும், மேற்கு ஆசிய கடல் பகுதியில் பணியாற்றும் இந்தியர்களின் பாதுகாப்பு குறித்து கவலைகளை ஏற்படுத்தியுள்ளது.

ஈரான் மீது இஸ்ரேலும் அமெரிக்காவும் இணைந்து போர் தொடுத்துள்ளன. இதற்கு ஈரானும் பதிலடி கொடுத்து வருகிறது. இஸ்ரேல் மற்றும் வளைகுடா நாடுகளில் உள்ள அமெரிக்க இராணுவ தளங்களை குறிவைத்து ஈரான் தாக்குதல் நடத்தி வருவது குறிப்பிடத்தக்கது.



# ஈரானுடன் பேச்சுவார்த்தை இல்லை; காலம் கடந்துவிட்டது என்கிறார் ட்ரம்ப்



ஈரானுடனான அமைதிப் பேச்சுவார்த்தைக்கான கதவுகள் அடைக்கப்பட்டுவிட்டன எனவும் இனி எவ்வித சமரசத்திற்கும் இடமில்லை என்றும் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

தனது ட்ரூத் சோஷியல் பக்கத்தில் இது குறித்து பதிவிட்டுள்ள ட்ரம்ப்,

“ஈரானின் வான் பாதுகாப்பு, விமானப்படை, கடற்படை மற்றும் தலைமைத்துவம் அனைத்தும் இப்போது இல்லாமல் போய்விட்டன. இப்போது அவர்கள் எங்களுடன் பேச விரும்புகிறார்கள். ஆனால் நான் சொல்கிறேன், காலம் கடந்துவிட்டது.” என்று குறிப்பிட்டுள்ளார்.

ஈரானின் உச்ச தலைவர் காமேனி கொல்லப்பட்ட பிறகு, அந்நாடு பேச்சுவார்த்தைக்குத் தயாராக இருப்பதாகத் தகவல் வெளியான நிலையில், ட்ரம்ப் அதனை நிராகரித்துள்ளார்.

இதற்கிடையில், ஜெனீவாவில் உள்ள ஐ.நாவுகான ஈரான் தூதர் அலி பஹ்ரைனி கூறுகையில்,

“தற்போதையசூழலில்பேச்சுவார்த்தை நடத்துவது பயனுள்ளதாக இருக்குமா என்பதில் எங்களுக்குப் பெரிய சந்தேகம் உள்ளது.” என்று தெரிவித்துள்ளார்.

ஈரானின் இராணுவ முகாம்கள் மற்றும் தலைமையகங்கள் மீது அமெரிக்கா மற்றும் இஸ்ரேல் தொடர்ந்து நடத்தி வரும் தாக்குதல்களால், ஈரான் தரப்பிலும் பேச்சுவார்த்தைக்கான ஆர்வம் குறைந்துள்ளதாக தெரிகிறது.

மத்திய கிழக்கில் போர் மேகங்கள் சூழ்ந்துள்ள நிலையில், ட்ரம்ப்பின் இந்த பிடிவாதமான முடிவு, ஈரானின் ஆட்சிக் கவிழ்ப்பை நோக்கியே அமெரிக்கா காய்களை நகர்த்துவதை உறுதிப்படுத்துவதாக உலக அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.







# இஸ்ரேலிய தாக்குதலால் லெபனானிலிருந்து இரண்டு நாள்களில் 58,000 பேர் இடம்பெயர்வு

லெபனான் முழுவதும் இஸ்ரேலிய இராணுவம் முன்னெடுத்து வரும் வான்வழித் தாக்குதல்கள் காரணமாக அந்நாட்டின் மனிதாபிமான நிலைமை பாரிய சரிவைச் சந்தித்துள்ளது.

லெபனான் அரசாங்கத்தின் அனர்த்த மேலாண்மைப் பிரிவின் தகவல்படி, இடம்பெயர்ந்தவர்களின் எண்ணிக்கை நேற்று இருமடங்காக அதிகரித்துள்ளதாக சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

அத்தோடு, கடந்த 48 மணிநேரத்திற்குள் 58,000 ற்கும் அதிகமான பொது மக்கள் பாதுகாப்பான இடங்களைத் தேடித் தமது இருப்பிடங்களை விட்டு வெளியேறியுள்ளனர்.

மேலும், நாடு முழுவதும் இஸ்ரேல் நடத்திய தாக்குதல்களில் இது வரை 50 ற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகின்றது.

ஈரானின் உயர்மட்டத் தலைவரை அமெரிக்க – இஸ்ரேலிய கூட்டுப் படைகள் படுகொலை செய்தமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, இஸ்ரேல் மீது ஹிஸ்புல்லா அமைப்பு ஏவுகணை மற்றும் ஆளில்லா விமான தாக்குதல்களை நடத்தியிருந்தது.

இதற்குப் பதிலடியாகவே தாம் இந்தத் தாக்குதல்களை நடத்துவதாக இஸ்ரேல் தெரிவித்துள்ளது.

தொடர்ச்சியான குண்டுவீச்சுகள் காரணமாக லெபனானின் தெற்குப் பகுதி மற்றும் ஏனைய முக்கிய நகரங்களில் இருந்து மக்கள் வெளியேறி வருவதால் பெரும் நெருக்கடி நிலை ஏற்பட்டுள்ளதாகவும் சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



# இன்றைய ராசி பலன்கள் - 04.03.2025



மேஷம்

இன்று பொதுவாக சிறந்த நாள். நீங்கள் மிகவும் கவனமாக செயலாற்ற வேண்டும். புத்திசாலித்தனத்தை மேம்படுத்திக் கொள்வது நல்லது.

உங்களுள் மறைந்திருக்கும் திறமைகளை வெளிக்கொணர்வதன் மூலம் திருப்தி காண்பீர்கள். உங்கள் பணிகளை முடிப்பதற்கு இது பயனுள்ளதாக இருக்கும்.

உங்கள் துணையுடன் வெளிப் படையாகப் பழகுவீர்கள். இதனால் இருவரிடையே நல்ல புரிந்துணர்வை பராமரிக்க இயலும்.

நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்கும்.உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்வீர்கள். புதிய முதலீடு போன்ற முக்கிய முடிவுகளை நீங்கள் எடுக்கலாம்.

இன்று பொதுவாக ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். பிரார்த்தனை மேற்கொள்வதன் மூலம் உங்கள் ஆரோக்கியம் மேம்படும்.



ரிஷபம்

இன்று உற்சாகமான நாளாக இருக்காது.இன்று அதிக பலன்கள் எதிர்பார்க்க இயலாது. குழப்பம் நிலவும். பிரார்த்தனை மற்றும் இறை வழிபாடு உதவிகரமாக இருக்கும். குழந்தைகளின் முன்னேற்றமும் நீங்கள் எதிர்பார்க்கும் வகையில் இருக்காது.

இன்று பணிச்சுமை அதிகமாக இருக்கும். இன்று நீங்கள் திட்டமிட்டு ஆற்றலுடன் பணியாற்ற வேண்டும்.

உங்கள் உறவில் நல்லிணக்கமும் மகிழ்ச்சியும் பராமரிக்க நீங்கள் எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று பண வரவு குறைந்து காணப்படும். உங்கள் பணத்தை நிர்வகிப்பதை கடினமாக உணர்வீர்கள்.

ஆரோக்கியம் சிறப்பாக இருக்காது. காய்ச்சல் மற்றும் தலைவலி ஏற்பட வாய்ப்புள்ளது.



மிதுனம்

இன்று நீங்கள் மிகவும் யதார்த்தமாக இருக்கவேண்டியது அவசியம். உங்களை மகிழ்ச்சியாக வைத்துக் கொள்வதன் மூலம் உங்கள் நம்பிக்கை அதிகரிக்கும். இன்று அதிர்ஷ்டம் உங்களுக்கு சாதகமாக இருக்காது.

சிறந்த பலன்களைக் காண இன்று நீங்கள் கடினமாக உழைக்க வேண்டும். உங்கள் பணியில் வெற்றி காண நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டும். இதன் மூலம் உங்களுக்கு திருப்தி உண்டாகும்.

உங்கள் மனதில் அகந்தை உணர்வு காணப்படும். இதனை உங்கள் துணையிடம் வெளிப்படுத்துவீர்கள். இதனால் உங்கள் துணையுடனான உறவு பாதிக்கும்.

பொறுப்புகள் அதிகரிப்பதன் காரணமாக இன்று பணப்பற்றாக்குறை காணப்படும்.சூழ்நிலையை கையாள்வதை கடினமாக உணர்வீர்கள்.



கடகம்

இன்று உங்களுக்கு சாதகமான நாள். உங்கள் இலக்குகளை எளிதில் அடைய முடியும். இன்று நீங்கள் சிறந்த திட்டங்கள் மூலம் பயன் பெறுவீர்கள்.

இன்று உங்கள் பணிக்கு பாராட்டு பெறுவீர்கள். கூடுதல் ஊக்கத்தொகை மற்றும் சலுகைகள் பெறுவதற்கான வாய்ப்பு உள்ளது.

உங்கள் துணையுடன் நண்பர் வீட்டு திருமணத்தில் பங்கு கொண்டு மகிழ்வீர்கள். இது உங்களுக்கு மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கும்.

இன்று வலுவான நிதி ஆதாரத்தை அமைத்துக் கொள்வீர்கள். உங்கள் சேமிப்பு ஆற்றலும் அதிகரிக்கும்.

உங்களிடம் காணப்படும் சிறந்த ஆற்றல் காரணமாக இன்று உங்கள் ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும்.



சிம்மம்

ஏழை மற்றும் உடல் ஊனமுற்றோருக்கு தானங்கள் மற்றும் தொண்டு செய்ய இன்றைய நாளை பயன்படுத்திக் கொள்ளுங்கள்.இதனால் கடவுளின் ஆசியும் மகிழ்ச்சியும் கிட்டும். இன்று முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்கவும்.

இன்று அதிக பணிகள் இருப்பதாக உணர்வீர்கள். இன்று திட்டமிட்டு பணியாற்றினால் வெற்றி கிடைக்கும். சக பணியாளர்களால் தொல்லைகளை சந்திப்பீர்கள்.

இன்று உங்கள் துணையுடன் அதிகமாக பேசுவதை தவிர்க்கவும். நீங்கள் இருவரும் இடைவெளியுடன் பழகுவது நல்லது. இதனால் விரும்பத்தகாத சூழ் நிலைகளை தவிர்க்கலாம்.

இன்று செலவுகள் அதிகமாக காணப்படும். இன்று அதிக பொறுப்புகளை சந்திக்க வேண்டியிருக்கும். தேவையற்ற செலவுகள் செய்ய வேண்டியிருக்கும்.



கன்னி

இன்றைய நாளில் சில போராட்டங்கள் இருக்கும் என்பதால் பொறுமையாக கையாள வேண்டும். பொழுதுபோக்கு நிகழ்ச்சிகளில் பங்கு கொள்வது உதவியாகவும் ஆறுதலாகவும் இருக்கும்.

உங்கள் பணிகளை மேற்கொள்ளும் போது போராட்டங்களை சந்திப்பீர்கள். சக பணியாளர்களுடன் நல்லுறவு பராமரிப்பதில் பிரச்சினை காணப்படும்.

உங்கள் துணையுடன் கவனமாகப் பேசவும். இன்று நீங்கள் உங்கள் துணையுடன் உணர்ச்சி வசப்படுவீர்கள். இதனால் உறவின் நல்லிணக்கம் பாதிக்கும்.

நிதி நிலைமை சிறப்பாக இருக்காது. இன்று தேவையற்ற செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலையை ஏற்படுத்தும்.

இன்று சிறந்த ஆரோக்கியத்துடன் இருப்பீர்கள். உங்களிடம் தன்னபிக்கை மற்றும் ஆற்றல் சிறப்பாக இருக்கும்.



துலாம்

இன்று நீங்கள் சில சௌகரியங்களை விட்டுக்கொடுக்க வேண்டியிருக்கும். முக்கிய முடிவுகள் எடுக்க இன்று உகந்த நாள் அல்ல. மன சஞ்சலம் காரணமாக சாதகமான விளைவுகள் காண்பதில் தடை இருக்கும்.

பணியில் வளர்ச்சி சிறிது குறைந்து காணப்படும். உங்கள் பணிகளை குறித்த நேரத்தில் முடிப்பதை கடினமாக உணர்வீர்கள். பணிகளை திட்டமிட்டு மேற்கொள்ள வேண்டும்.

இன்று உங்கள் கட்டுப்பாட்டை இழக்க நேரலாம் எனவே சகஜமான அணுகுமுறை தேவை. அமைதியான முறையில் விஷயங்களை ஏற்றுக் கொள்வதன் மூலம் அன்பும் மதிப்பும்பெருகும்.

பணப்புழக்கம் போதிய அளவு காணப்படாது. அதிக பொறுப்புகள் காணப்படும்.உங்கள் குடும்பத்திற்கு அதிக பணம் செலவு செய்ய வேண்டியிருக்கும்.



விருச்சிகம்

இன்று கவனம் இழக்க வாய்ப்புள்ளது. அதனால் பின் தங்கியிருப்பீர்கள். உங்கள் செயல்களில் கவனம் தேவை. தியானம் மேற்கொள்வதன் மூலம் கடினமான சூழ்நிலையை சமாளிக்க இயலும்.

உங்கள் பணிகளை குறித்தநேரத்தில் முடிக்க இயலாது. பணியில் பலன்கள் உங்களுக்கு சாதமாக அமைய திட்டமிட்டு செயலாற்ற வேண்டும்.

உங்கள் துணையிடம் நீங்கள் உணர்ச்சி வசப்படுவீர்கள். அவரை நண்பர் போல நடத்துவதன் மூலம் ஆரோக்கியமான உறவு காணப்படும்.

இன்று மிதமான பணப்புழக்கம் காணப்படும். அதிகரிக்கும் பொறுப்புகளை நிர்வகிப்பது கடினமாக இருக்கும். உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ள நீங்கள் கடன் வாங்க நேரலாம்.

# இன்றைய ராசி பலன்கள் - 04.03.2025




நீங்கள் உங்கள் ஆற்றல் மூலம் வெற்றி காண்பீர்கள். உங்கள் மனது தெளிவாக இருக்கும். எனவே உங்கள் செயல்களை சிறப்பாக ஆற்றுவீர்கள். உங்களின் உறுதி காரணமாகஇன்றைய நாளை கழிப்பது உங்களுக்கு எளிதாக இருக்கும்.

புதிய வேலை வாய்ப்புகளால் நம்பிக்கையுடனும் புத்துணர்ச்சியுடனும் இருப்பீர்கள். உங்கள் பணிகளை விரைந்து மேற்கொள்வீர்கள்.

உங்கள் துணையிடம் அன்பு வயப்பட்ட நிலையில் இருப்பீர்கள். இதனால் உறவில் நல்லிணக்கம் ஏற்படும்.

இன்று உங்களிடம் போதிய பணம் காணப்படும். பணத்தைப் பொறுத்த வரை திருப்தியான நிலை இருக்கும்.

உங்களிடம் காணப்படும் தைரியம் காரணமாக இன்று நீங்கள் ஆரோக்கியமாக இருப்பீர்கள்.




இன்று மிகவும் சிறப்பான நாள். உங்கள் நலனை மேம்படுத்தும் சில பயனுள்ள முடிவுகளை நீங்கள் எடுக்கலாம். இன்று திருப்தி நிலவும்.

உங்கள் பணியில் சுமூகமான பலன்கள் கிடைக்கும். உங்கள் மேலதிகாரிகளின் நன்மதிப்பை பெறுவீர்கள்.

உங்கள் துணையுடன் சமநிலை உறவை பராமரிப்பீர்கள். இதனால் உங்கள் இருவரிடையே நல்ல நட்புணர்வு மேம்படும்.

உங்கள் கையில் உள்ள பணம் போதுமானதாக இருக்கும். பணம் சேமிப்பதற்கான வாய்ப்பும் அதிகம்.

இன்று ஆரோக்கியம் சிறப்பாக இருக்கும். உங்களிடம் காணப்படும் திருப்தி காரணமாக சிறந்த ஆரோக்கிய நிலை இருக்கும்.




இன்று சற்று அனுகூலம் குறைவான நாள். இன்று நீங்கள் அதிர்ஷ்டத்தை விட உங்கள் முயற்சியை சார்ந்து செயல்பட வேண்டும். முக்கிய முடிவுகள் எடுப்பதை தவிர்க்க வேண்டும்.

உங்கள் பணிகள் இறுக்கமாக காணப்படும். ஓய்வெடுக்க நேரம் குறைவாக காணப்படும். சிறப்பான பலன் காண திட்டமிட்டு பணியாற்ற வேண்டும்.

உங்கள் மனதில் காணப்படும் குழப்பம் காரணமாக உங்கள் துணையுடன் ஆரோக்கியமான உறவை பராமரிக்க இயலாது. எனவே எந்த விஷயத்தையும் சகஜமாக எடுத்துக் கொள்ள வேண்டும்.

இன்று நிதி வளர்ச்சி சிறப்பாக இருக்காது. அதிக செலவுகள் காணப்படும். இது உங்களுக்கு கவலை அளிக்கும்.

இன்று சிறிது அசௌகரியமாக உணர்வீர்கள்.




அதிக பொறுப்புகளும் பதட்ட நிலையம் காணப்படும். இறை வழிபாட்டின் மூலம் உங்கள் மனதை கட்டுப்பாட்டுடன் வைத்திருக்க வேண்டும்.

நீங்கள் செய்யும் பணியில் உங்களுக்கு திருப்தி இருக்காது. பணியிடச் சூழலும் சிறப்பாக இருக்காது.

குழப்பமான மனநிலை காரணமாக ஸ்திரத்தன்மை குறைந்து காணப்படும். இதனால் உங்கள் துணையுடன் உங்கள் உணர்வுகளை நல்ல விதத்தில் பகிர்ந்து கொள்ள இயலாது.

இன்று குறைந்த அளவு பணம் காணப்படும். பெரிய அளவிலான புதிய முதலீடு சம்பந்தமான எந்த விதமான முடிவையும் எடுக்காதீர்கள்.

இன்று செரிமானம் சம்பந்தமான பிரச்சினை இருக்கும். எண்ணெய் பதார்த்தங்கள் உட்கொள்வதை தவிர்க்க வேண்டும்.





# திருமலையில் ஊடகவியலாளர்களுக்கு நோன்புப் பேரீச்சம்பழம் வழங்கிவைப்பு!

(அபு அலா)

கிழக்கு மாகாண திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு பேரீச்சம் பழம் வழங்கி வைக்கும் நிகழ்வு நேற்றுத் திருகோணமலையில் இடம்பெற்றது.

புனித ரமழான் மாதத்தையொட்டி திருகோணமலை மாவட்ட ஊடகவியலாளர்களுக்கு பேரீச்சம் பழம் வழங்கி வைக்க வேண்டும் என்ற வேண்டுகோளை சமூக ஆர்வலர் அஷ்ஷெய்க் அப்துல் அஸீஸ் (நழீமி) இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானியிடம் முன்வைத்தனர்.

அதற்கமைவாக, இலங்கைக்கான சவூதி அரேபியத் தூதுவர் காலித் ஹமூத் அல்கஹ்தானியினால் வழங்கி வைக்கப்பட்ட பேரீச்சம்பழப் பெட்டிகளை சமூக ஆர்வலர் அஷ்ஷெய்க் அப்துல் அஸீஸ் (நழீமி) வழங்கி வைத்தார்.